T-UN-430

தமிழ் வாழ்க

# தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர்: ௫௬ மலர்: ௰௧

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: உ௲௰௪, துந்துபி மாசி
(1983 பிப்ரவரி–மார்ச்)

THANJAVUR P.&T. COLONY

பொழிற்றொண்டர்:
வே. சுப்பிரமணியன்

# தமிழ்ப் பொழில்

துணர்: ௩௬] [மலர்: ௰௧

உள்ளுறை:

1) இந்திய நாகரிகத்திற்குந்
தமிழகம் வழங்கியவை .. ... 477
டாக்டர். க. த. திருநாவுக்கரசு.

2) நாவல் உரைநடைக் காப்பியம்
என்பது பொருந்துமா? ...509
வீ. லீமாரோஸ்மாலா, பி. லிட்.,

3) பஞ்ச தந்திரக் கதை —ஓர் ஆய்வு .. ... 513
அ. ம. சத்தியமூர்த்தி.

4) புரட்சிக் கவிஞரின் இருண்ட வீடு .. .. 522
இராம சுப்பிரமணியன், எம். ஏ., எம். லிப்.,
எஃசி., பி. எல்., டி. எச். இடி.,

5) பெரியகுளத்துக் கல்வெட்டில்
மேல் நெடுங்களநாடு . . . நெடுங்குளநாடு .. 526
புலவர். து. இராசகோபால்.

# தமிழ்ப் பொழில்

**கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு**

| | | |
|---|---|---|
| துணர் ௫௬ | திருவள்ளுவர் யாண்டு உ௲௰௪<br>துந்துபி—மாசி<br>1983 பிப்ரவரி—மார்ச்சு | மலர் ௰௧ |


தமிழ் வாழ்க

## இந்திய நாகரிகத்திற்குத்
## —: தமிழகம் வழங்கியவை :—

முனைவர் க. த. திருநாவுக்கரசு

இந்திய நாடு பழம்பெரும் நாடு. உலகம் வியந்து போற்றும் அருங்கலைகள் பலவற்றின் தாயகமாகவும், மெய்ப்பொருளை ஆராய்ந்தறிய முயலும் சமய நெறிகள் பலவற்றின் பிறப்பிடமாகவும் சிறப்புற்று விளங்குகிறது இந்தியா. உலகில் இன்றுவரை இருபத்து மூன்று நாகரிகங்கள் அரும்பி, மலர்ந்து மணம் பரப்பியுள்ளன. அவற்றுள் இருபத்தொரு நாகரிகங்கள் காலத்தின் கொடுமையால் வாடி, வதங்கி, உலர்ந்து, உதிர்ந்து விட்டன. இரண்டே நாகரிகங்கள் தொல் பழங்காலம் முதல் இன்று வரை, அழிந்தொழியாது நின்று நிலவி வருகின்றன. அவை இந்திய நாகரிகமும் சீன நாகரிகமுமாகும்.

வரலாற்றுக் கதிர்கள் சென்று ஒளிவீச முடியாதத் தொல் பழங் காலம் முதல் இந்திய நாகரிகம் வற்றாதப் பேருற்றாய், உலகிற்கு நாகரிக ஒளியினைத் தந்து பிறர் அழிக்க முயன்றாலும் அழியாது, இன்றும் இளமைப் பொலிவுடன் இலங்குகிறது.

இந்திய நாகரிகம் இன்று நிலைத்திருக்கும் உலக நாகரிகங்களுள் பழமையானது மட்டுமன்று; இதுவரை மனிதர் உருவாக்கியுள்ள நாகரிகங்களில் எல்லாம் சிக்கலான கூறுகள் பலவற்றைத் தன்னுள்ளே அடக்கியுள்ளதுமாகும். பல்வேறு இனத்தவர்களும், வெவ்வேறு வரலாறு, பண்பாட்டுப் பின்னணியினைக் கொண்ட மக்களும் இந்திய மண்ணில் சந்தித்திருக்கின்றனர். அவர் ஒவ்

வொருவரும் தங்கள் தனிப் பண்புகளை 'இந்தியப் பண்பாட்டுக் கொப்பரையில்' போட்டு உருகச் செய்துள்ளனர். பின்னர், அவர்கள் புதியதொரு 'கலவை நாகரிகத்தை' உருவாக்கியுள்ளனர். உலக நாகரிகங்கள் அனைத்தும் பல்வேறு பண்பாடுகளின் கலப்பு, இணைப்பு, பிணைப்பு ஆகியவற்றின் விளைவாகத் தோன்றியுள்ளன உலகிலேயே, வளமானதும் பழமையானதுமான இந்திய நாகரிகம் பரவலான இத்தகைய கலப்பையும், இணைப்பையும் புலப்படுத்தும் ஒப்பற்ற நாகரிகமாக விளங்குகிறது.

இந்திய நாகரிகம் ''ஆரிய - திராவிட சமூக, சமயப் பண்பாட்டு இணைப்பின் பயனாகத் தோன்றியது. இரு சாராரின் மொழிகளும், பழக்க வழக்கங்களும், முறைகளும் நற்பண்புகளும் மற்றும் திராவிடருக்கு முந்திய ஆரியக் கலப்பற்ற பழங்குடி மக்களின் பண்பாடும் கலந்ததன் விளைவாகத் தோன்றியதே இந்திய நாகரிகமாகும்.

இரு பண்பாடுகளின் இணைப்பு வட இந்தியாவில்தான் நிகழ்ந்தது. வேத காலத்திலும் அதற்குப் பின்னரும் இரு இனத்தாரும் தொடர்பு கொண்டனர். வேத காலத்து சமற்கிருதத்திலும் கூட திராவிட மொழியின் சாயல் நன்கு படிந்திருக்கிறது. ஆரிய மொழியின் வழக்கத்திலும், திராவிட மொழியின் இயல்புகள் கலந்துள்ளதை இன்றும் நாம் காணலாம். ஆரியரது சமயம், வழிபாட்டு முறைகள், சிந்தனை, புராணக் கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள் முதலிய அனைத்திலுமே திராவிடக் கலப்பு காணப்படுகிறது.[1]

ஒரு ரூபாய் நாணயத்தில், பன்னிரண்டணாவிற்கு மேல், ஆரியரல்லாதாரின் (திராவிடர், ஆத்திரியப் பழங்குடி மக்களின்) பண்பாட்டுக் கூறுகள் கலந்துள்ளன என்று அவை கலந்துள்ள முறையினை இந்திய நாட்டு முறையில் கூறலாம்.[2]

இந்திய நாகரிகத்தில் காணப்படும் திராவிடப் பண்பாட்டின் கலப்பினை மதிப்பிடுகின்ற அறிஞர்கள், இந்திய நாகரிகத்தில் காணப்படும் ஆரியர் அல்லாதாரின் பண்பாட்டுக் கூறுகளில் திராவிடப் பண்பாட்டின் கூறுகளே முதன்மையானவையும், முக்கியமானவையு மாகும். இந்தியப் பண்பாட்டின் அடிப்படை, ஐம்பது விழுக்காட்டிற்கு (50 %) மேல் திராவிடப் பண்பாட்டின் கூறுகளைக்

---

1. Dr. K. M. Munshi., Facets of Indian Culture, p. p. 39-40.
2. Dr. S. K. Chatterji, The Vedic Age p. 164.

கொண்டிருப்பது மறுக்க முடியாத உண்மை''[3] என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கது.

இந்தியாவின் வடபகுதி, வரலாற்றுக் காலம் நெடுகப் பல முறை அயலாரின் படையெடுப்புகளால் அல்லலுற்றது. அத்தகைய இன்னல் நிறைந்த காலங்களில், 'இந்திய நாகரிகத்'தைப் போற்றிக் காத்த பெருமை தென்னாட்டிற்குரியதாகும். அதனால், இந்திய நாகரிகத்தில் தென்னாட்டுப் பண்பாட்டின் கூறுகள் பேரளவில் இடம் பெற்றன.

## 1. தமிழ் மொழி:

தென்னாட்டில் தொன்மைச் சிறப்புடன் விளங்கி வருவது தமிழ்ப் பண்பாடு. இப்பண்பாடு தொன்று தொட்டு இன்றுவரை, உயிர்த் துடிப்போடு, நின்று நிலவி வருகிறது. உலகம் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் தமிழ்ப் பண்பாடு தன்னிகரற்று விளங்குகிறது.

இன்று இருநூற்றுக்கு மேற்பட்ட மொழிகள் இந்திய மக்களால் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள் இலக்கிய வளமிக்க மொழி, சிறந்த பண்பாட்டின் கூற்றாய் விளங்கும் மொழி, உலகப் பழம் பெரும் நாகரிகங்களோடு தொடர்புடையதாகத் திகழும் மொழி, தமிழ் மொழியே யாகும். வடமொழி நீங்கலாக உள்ள பிற இந்திய மொழிகளின் தோற்றம், வளர்ச்சி எல்லாம், கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்குள் அடங்கிவிடுகின்றன. இந்தியத் தொன்மொழியாக விளங்கும் தமிழ் மொழி உலகின் உயர்தனிச் செம்மொழிகளுள் (Classical language) ஒன்றாக விளங்குவது இங்குக் கருதத்தக்கதாகும்.

இந்திய நாகரிகம் நெடுங்காலத்திற்கு முன்பே கடல் கடந்த அயல் நாடுகளுக்குச் சென்று பரவியுள்ளது. மொகஞ்சதாரோ, ஆரப்பா நாகரிக காலம்முதல் இன்று வரை இந்தியாவிற்கு வெளியே கடல் கடந்த நாடுகளிலெல்லாம் இந்திய நாகரிகத்தோடு சென்று பரவியுள்ள இந்திய மொழி, தமிழ் மொழியே என்பது உலகறிந்த உண்மை.

## 2. பழந்தமிழ் இலக்கியம்:

இந்திய இலக்கியச் செல்வத்தை வளர்க்கும் நற்பணியில் தமிழகம் ஈடுபட்டு ஆற்றியுள்ள தொண்டினை உலகப் பேரறிஞர்கள்

---

3. Dr. S. K. Chatterji, Racial and Cultural Intermixture in India. Tamil Culture. Vol. 7, P. 275.

பலர் பாராட்டியுள்ளனர். எத்தனையோ உள்நாட்டுக் குழப்பங்களும் வெளிநாட்டுப் படையெடுப்புகளும் நடந்தும், தண்டமிழ் மொழியானது தொடர்ந்து தன் இலக்கியங்களைப் படைத்து இடையீடின்றி வளர்த்து வந்துள்ளதைப் போன்று உலகில் வேறெந்த மொழியும் இம்முறையில் இலக்கியங்களைப் போற்றிப் படைக்கவில்லை.

இலக்கிய வளமிக்க இந்திய மொழிகள் பலவற்றுள்ளும் சமயச் சார்பற்ற —புராணச் சார்பற்ற இலக்கியங்களை (Secular Literature) உடைய மொழியாக ஒப்பற்று விளங்குவது தமிழ் மொழியெனில், அது மிகையாகாது மனித இனத்தின் அடிப்படை உணர்ச்சியாகிய காதலைப் போற்றிப் பாடும் 'அகப்பொருள்' பாடல்களையும், போரையும், வீரவுணர்ச்சியையும் சிறப்பித்துப் பாடும் புறப்பொருள் பாடல்களையும் பாடிய பண்டைத் தமிழ்ப் புலவர்கள், குறிப்பிட்ட எச்சமயத்திற்கும் முக்கியத்துவம் தராமல், அன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கையையும் நாட்டுப்புறக் காட்சிகளையும், நகர வாழ்வின் வளத்தினையும், இயற்கை யெழிலையும் ஏற்றிப் போற்றியுள்ளமை இந்திய இலக்கியத்தில் மட்டுமல்லாமல், உலக இலக்கியத்திலும் சிறப்பிடம்பெறத் தக்க வீறுடையதாகும்.

''சொற் சுருக்கமும், தெளிவும், இனிமையும், இன்ப எக்களிப்பும், மனித இனத்தின் உணர்ச்சித் துடிப்பும் நிறைந்த உயிரோவியங்களாக விளங்கும் இச்சங்கப் பாடல்கள், 'செம்மொழி இலக்கியங்களாகப்' போற்றப் படத்தக்கன. இவற்றோடு பிண்டாரின் (Pindar) படைப்புகளே ஒப்பிடத் தக்கன. பிண்டாரின் படைப்புகளைக் காட்டிலும் அமைதியழகும், சொல் நயமும் வாய்ந்தனவாக இவை உள்ளன. இந்திய நாட்டு இலக்கியங்களுள் நன்கு முதிர்ச்சியடைந்ததும், மக்களுடைய உள்ளத்தின் நுட்பமான உணர்ச்சிகளைச் சித்தரிப்பதும் சங்க இலக்கியம் என்றால், அது மிகையாகாது அது மாண்புமிக்க கிரேக்கக் கலையின் வனப்பையும், சமநிலைப் பண்பையும், அமைதிப் பொலிவையும் பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது 4

உலகிலுள்ள மக்களுள் ஐந்தில் ஒரு பகுதியினரால் புத்த சமயம் பின்பற்றப்படுகிறது புத்த சமயத்தின் புனித மொழி–வேதமொழி பாலி பாலி மொழியில் புத்த சமய நூல்கள் எண்ணற்றவை எழுதப் பட்டுள்ளன. இத்தகைய சிறப்புவாய்ந்த பாலி மொழிக்கு, முதன் முதலில் இலக்கணத்தை வகுத்துக் கொடுத்த பெருமை தமிழகத்

4. MeimeL' Inde Classique ed. L. Renon, p. 302.

திற்கே யுரியதாகும். கச்சாயனர் ('கச்சி' என்ற காஞ்சியைச் சேர்ந்தவர்) முதன் முதலில், பாலி மொழிக்கு இலக்கணம் எழுதி யுதவியதாக ஆராய்ச்சியாளர் அறிவிக்கின்றனர்.[5]

புத்த சமயத்தோடு, தொடர்புகொண்ட உலக மொழிகள் நூற்றைம்பதிற்கு மேற்பட்டன. ஆயினும், புத்த சமயத்தின், கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்கும் 'காப்பியம்' அம்மொழிகளில் இன்று இல்லை. தமிழிலுள்ள புத்த சமயக் காப்பியமாகிய 'மணிமேகலை' ஒன்றுதான், புத்த சமயத்தின் தனிப்பெரும் காப்பியமாக விளங்குகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களிலேயே மிகவும் சிறப்புடையதாகப் போற்றப்படுவது திருக்குறள். ''மக்களினத்தின் வேதமாக விளங்கும் திருக்குறளில் மில்டனின் கவிநலனும், தாந்தேயின் காப்பிய அழகும், செகப்பிரியரின் உலகப் பொதுமையும், பிளேட்டோவின் இலட்சிய நோக்கும், மாக்கசு அரேசியசின் அறவேட்கையும் ஏற்ற அளவில் இணைந்தும், இழைந்தும், கலந்தும் காணப்படுகின்றன'' இத்தகைய அரும்பெரும் நூலினை உலகிற்குத் தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு.

சமயாச்சாரியர்களான சங்கரர், இராமாநுசர், இராமானந்தர் ஆகியவர் கருத்துகளுக்கும் அருளாளர்களான இராமகிருட்ணர், விவேகாநந்த அடிகள், காந்தியடிகள் ஆகியோர் பண்புகளுக்கும் மூல முதலைச் சமற்கிருதத்திலோ, வேறெந்த மொழியிலுமுள்ள நூல்களிலோ காணமுடியாது. அவை திருவள்ளுவருடைய திருக்குறளின் மரபில் வந்தவை[6] என்பது டாக்டர் சுவைட்சரின் முடிவாகும்.

கற்பார் உள்ளத்தை உருக்கும் உயர்ந்த கவிதை நயத்தோடு, மனித இனத்தின் அன்பினை வெளிப்படுத்துவது சிலப்பதிகாரம், காப்பியப் பண்புகள் முழுநிறைவு பெற்றதாய், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் முறையாகக் குழைத்துத் தருவதாய் அமைந்துள்ளது இம்முத்தமிழ்க்காப்பியம் புகழ்மிக்க உலகப் பெருங்காப்பியங்களோடு ஒன்றாக வைத்துப் போற்றத்தக்க சிறப்புடையது சிலப்பதிகாரம் என்பர் டாக்டர் கமில் லூலெபில்.[7]

---

5. Dr. Bimala churn saw, South India as a centre of Pali Buddhisum' Dr. S. K. Aiyangar Common Vol., p 245
6. Dr. Albert Schweitzes. Indian Thought and its Development P-20.

7 →

3, பக்தி இலக்கியம்

இந்தியப் பண்பாட்டின் சிகரமாக விளங்குவது பக்திநெறி. ''அன்பே வடிவாக இறைவன் விளங்குகிறான். அவனை அடைவதற்குக் கானகம் சென்று, காய்கனி தின்று கடுந்தவம் செய்து அல்லற்பட வேண்டா'' என்பதை

ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு
உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம் செய்ய வேண்டா

என்று தமிழகத்தில் தோன்றிய அருளாளர்கள் மக்களுக்கு அறிவித்தனர். உள்ளத்தே உறையும் இறைவனை, வழிபடுவதற்குரிய பக்திநெறியை அருள்நெறிச் சான்றோர்கள் இரண்டாக வகுத்தனர். ஒன்று திருக்கோயில் வழிபாடு; மற்றொன்று ஆன்ம வழிபாடு. நடமாடும் கோயில்களாக உள்ள மக்களுக்குச் செய்யும் தொண்டே, மகேசுவரனுக்கு உகந்ததொண்டு என்பது அன்புநெறியின் கோட்பாடு. இவ்வன்பு நெறியின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்கும் தேவார திருவாசகங்களும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமும் தமிழிலே உள்ளமை உலகறிந்த உண்மை. பக்தி நெறியின் பழங்காலச் சுவடுகளைத் தமிழ் அல்லாதப் பிற இந்திய மொழிகளில் காண்பது அரிது.

''தமிழ்மக்கள் தங்களுடைய ஆழ்ந்த இறை அன்பினை-பக்திப் பெருக்கைத் தேவாரம், நாலாயிரப் பிரபந்தம் என்னும் நூல்களிலுள்ள பாசுரங்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். இதைப் போன்ற பக்திச் சுவைநலம் கனிந்த பாசுரங்களை வேறு எம்மொழியிலும் காண இயலாது, செமிடிக் (எபிரேய) மொழியில் 'ஒரு தெய்வ' வழிபாடு அறவியல் மாண்புடன் அறிவொளி வீசுகிறது, பேரரசுக் கொள்கையினை உலகிற்கு அளித்த இலத்தீன் மொழியின் உயிர்ப்பாக விளங்குவது சட்டமாகும். கலையின் கவின்மிகு வடிவமாக இலங்குவது கிரேக்கமொழி. பிரெஞ்சு, செர்மன், ஆங்கிலம் ஆகியபுத்துலக மொழிகள் அறிவியல் முன்னேற்றப் பாதையில் ஏறுநடைபோட்டுச் செல்லுகின்றன. தத்துவத்தின் திருக்கோயிலாக சமற்கிருதமொழி திகழ்கிறது. மனித வாழ்க்கையின் உயர்ந்த பண்புகளை அறியவேண்டுமானல், நாம் இம்மொழிகளை அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம். இதைப்போன்றே, கடவுள் பக்தியினை அறிவினால் அறியவும், உள்ளத்து உணர்வினால் உணரவும் உலகம் தமிழ்மொழியிடத்து வந்தாகவேண்டும். கடவுள்

---

7. Dr. Kamil Luelebil. A short note on the Tamils contribution to world's civilization in Tamil culture. Vol. 5 P-296.

பித்தினையூட்டி, எலும்பையும் உருக்கிவிடக் கூடிய ஆற்றல்மிக்க அன்புப் பெருக்காக விளங்கும் பாசுரங்களை உள்ளொளி பெருக்கி. உலப்பிலா ஆனந்தத்தை அளிக்கும் அமுதமயமான இன்பப் பாசுரங்களைத் தன்னகத்தே கொண்டு இருப்பது தமிழ்மொழி. பாசுரங்களை நாம் ஊன் கலந்து, உயிர் கலந்து ஓதினால் தமிழ் மொழியின் நயத்தையும் நுட்பத்தையும் உணரலாம்.[8]

இந்தியாவிலுள்ள சமயங்கள் ஒவ்வொன்றின் சார்பாக இயற்றப்பட்ட இலக்கியங்களை உடைய மொழியும் தமிழேயாகும். தமிழ்மொழி ஒன்றில்தான் கிறித்துவ இசுலாமிய இலக்கியங்களும் வழிபாட்டுப் பாடல்களும் காணப்படுகின்றன. வேறெந்த இந்திய மொழியிலும் எல்லாச் சமய நூல்களும் இவ்வாறு முதல் நூல்களாக அமைந்திருக்கவில்லை.

## அரசியல் கோட்பாடு

4. ஊராட்சிமுறை:

அயலாருடைய ஆதிக்கமும் அச்சுறுத்தலும் இன்றித் தமிழகம் பன்னெடுங்காலமாகத் தனியுரிமையோடு வாழ்ந்து வந்தமையால், தமிழ்ச் சமுதாயம் பேரளவிற்கு ஒருமைப்பாடுடையதாக அமைய முடிந்தது. அதனால், நிலையான பழக்கவழக்கங்களைக் கொண்ட சமூக வாழ்வு மலர்ச்சியுற முடிந்தது; இதன் விளைவாகக் குறிப் பிட்ட ஓரிடத்தில் – ஒரு வட்டாரத்தில் வாழுகின்ற மக்கள் தங்களுடைய தேவைகளைத் தாங்களே அரும்பாடுபட்டு நிறைவு செய்து கொள்ளுவதற்குரிய மனவெழுச்சியைப் பெற்றனர். அம்மன வெழுச்சி, வட்டார இயல்புடைய நிலையங்கள் பலவற்றை அமைத்து, அவற்றைத் திறமையோடு செயல்படுமாறு செய்தது. இவ்வாறு பண்டைத் தமிழ்மக்கள் தங்களைத் தாங்களே ஆளக் கற்றனர்.

சிற்றூர், பேரூர், மாநிலம் ஆகியவற்றில் சிறந்த தன்னாட்சி முறை சங்ககாலம் முதற்கொண்டே தமிழகத்தில் சிறப்புற்று விளங்கி யதைச் சரித்திரம் பேசுகிறது. சோழர் ஆட்சிமுறையின் சிறப் பியல்பாக விளங்குவது இந்த ஊராட்சி முறையேயாகும் ஊர் களிலும், நகரங்களிலும் மக்களாட்சிப் பண்பின் அடிப்படையில் அமைந்த ஊராட்சி மன்றங்களும், பெரிய நகரங்களில் அவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட 'நகரம்' எனப்பட்ட நகராட்சி மன்றமும் நாட்டாட்சியை நன்முறையில் நடாத்தின.

---

8. T. P. Meenakshisundaram's Sixty First Birth day Commemoration volume.

ஊராட்சி மன்றங்கள் மக்களிடையே குழு மனப்பான்மையை வளர்த்து, கூட்டு முயற்சியில் மக்களை ஈடுபடுத்திய முறை நம் முடைய கருத்தைக் கவருவதாகும்.

ஊராட்சி மன்றங்களுக்கு உரிமைகள் பலவற்றை மைய அரசு அளித்திருந்தது அவ்வரசு எல்லா உரிமைகளையும் தனக்கே யுரியதாக அதிகாரங்கள் அனைத்தையும் தன்னிடத்துக் குவித்துக் கொண்ட குவிமுக அரசாக (Buredureracy) இல்லாமல், பெரும் பாலான உரிமைகளை ஊராட்சி மன்றங்களுக்கு அளித்திருந்தமை வியக்கத்தக்க செய்தியாகும். மத்திய அரசு உள்ளூர்ச் சமுதாய அமைப்பினை அடக்கயொடுக்கியாளாமல், உரிமைகள் பல வழங்க வந்தமையால், அவை தன்னாட்சியுரிமைபெற்ற உள்ளூர்ச் சமுதாய அரசுகளாக விளங்கின. நாட்டாட்சியின் அடிப்படையாக அமைந்து இச்சிறு 'குடியரசுகள்', மக்களிடையே கூடிவாழும் மனப்பான்மையை வளர்த்தன. நாட்டாட்சியில் குடிமக்களுக்குரிய பொறுப்புணர்ச்சியையும், கடமையுணர்ச்சியையும், அவை வளர்த்தன; உரிமை வாழ்வில் மக்களுக்கு ஆர்வத்தை ஊட்டின; திறமையும் தூய்மையும் பொருந்திய சிறந்த ஆட்சிமுறை நாட்டிலே வேரூன்றி விளங்குமாறு செய்தன.

ஊர் மக்கள் பங்குகொண்டிருந்த ஊராட்சி முறை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென்னாட்டில் சிறப்பாகத் தமிழ் நாட்டில் அமைந்திருப்பதைப் போல், இந்தியாவின் மற்றெந்தப்பகுதியிலும் அக்காலத்தில் அமைந்திருக்கவில்லை. இன்றைய இந்திய ஆட்சி முறையின் அடித்தளமாக கருதப்படும் 'பஞ்சாயத்து இராச்சியத் தின்' தாயாக விளங்குவது பண்டைத் தமிழரின் ஊராட்சி முறை யாகும். இக்கால ஆட்சிமுறையினைச் செம்மையாக அமைத்துக் கொள்ள அம்மக்களாட்சி முறை வழிகாட்டியாக இருந்து வருகிறது

## 5. திருக்கோயில்கள்

தமிழகத்தின் திருக்கோயில்கள், தமிழ்ச் சமுதாயத்தின் நல் வாழ்வில் நாட்டம் கொண்டே சிறப்புமிக்க நிலையங்களாக விளங்கின. ஊர்கள் ஒவ்வொன்றும் கோயிலை மையமாகக் கொண்டே வளர்ச்சியுற்றன. அதைச்சார்ந்தே அவ்வூரின் சமுதாய வாழ்க்கை இயங்கிவந்தது.

இடைக்காலத் தமிழகத்தில் கோயில்கள், அவ்வுலகை அறிவிப் பனவாக இருந்தன. எனினும், அவை இவ்வுலகைப் புறக்கணித்து விடவில்லை. மக்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்குப் பல வழிங்கைகளை அவை அமைத்துத் தந்தன. மக்களுக்கு உதவி

புரியும் அறநிலையங்களாகவும், அறிவை வளர்க்கும் கல்வி நிறுவனங்களாகவும், மனவமைதியை வளர்க்கும் ஆன்மீக உணர்வின் வளர்ப்புப் பண்ணைகளாகவும், மக்கள் உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டும் அழகுமிகு கலைக்கூடங்களாகவும், அரிய நூற்களைத் தன்னகத்தே கொண்ட நூல் நிலையங்களாகவும் பிறவிப் பெருங்கடலை நீந்த முயல்வோருக்கு வழிகாட்டும் வான் பொருளாகவும், மண்ணக வாழ்விலே விண்ணக வாழ்க்கையின் பேறுகளைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் கலைக்கோயில்களாகவும் திருக்கோயில்கள் திகழ்ந்தன.

நிலக்கிழார்கள், வேலையாட்களை நியமித்து வேலை தருவோர், சமுதாய நலத்துக்குப் பாடுபடும் ஒப்புரவாளர் ஆகியோருடைய செயல்களையும் கடன் கொடுத்து உதவும் நிதிநிலையம், கல்வி நிலையம், பொருட்காட்சி சாலை, மருத்துவமனை ஆகிய வற்றின் பணிகளையும், தன்னைச் சுற்றி வாழும் மக்கள் சமுதாயத்திற்குக் கோயில்கள் செய்து வந்தன. மக்கள் அற உணர்வோடு நல்வாழ்வு வாழ்வதற்குரிய உதவிகள் பலவற்றையும் அருளுணர்வோடு புரிந்துவந்த தமிழகத்தின் திருக்கோயில்கள் இந்திய நாகரிகத்தின் வரலாற்றில், ஒப்புயர்வற்ற சமுதாய நிலையங்களாக விளங்குகின்றன

## 6. இசைக்கலை:

உலகம் கண்டு வியப்படையுமாறு அழகுக் கலைகள் பலவற்றை இந்தியா உலகிற்கு அளித்திருக்கிறது. அவற்றுள் இசைக்கலை, நாட்டியக் கலை, சிற்பக் கலை, படிமக்கலை முதன்மையானவை. இவற்றை உருவாக்குதற்குத் தமிழகம் பேரளவிற்குக் காரணமாக இருந்து வருவதை கலையியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.[9]

இசைத்துறையில் கருநாடக இசை, இந்துத்தானி இசை என்ற இரண்டே இன்றைய இந்தியாவில் சிறப்புற்று விளங்குகின்றன. சங்க காலத்திற்கு முன்பிருந்தே இசைத்தமிழ், நன்கு வளர்ச்சி அடைந்துள்ளதைப் பழந்தமிழ் நூல்கள் நன்கு தெரிவிக்

9. Indian Art & Culture was a joint creative of the Dravidian and Aryan genius a welding together of simboblic and reprsentative absract and explicitt language and thought.

—Dr. Ananda K Coomaraswamy.
History of Indian and Ind... Art p. 8.

கின்றன. தேவாரம் காலத்தில் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடிய பொழுது, மக்கள் உள்ளத்தை உருக்கும் கருவியாக 'இசை' பயன் படுத்தப்பட்டது. பண், திறம் எனும் இருவகைப் பிரிவுகளை யுடையது பண்டைத் தமிழிசை. மாத்திரைகள் எனப்படும் இருபத் திரண்டு வகை கருவிகளும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் எழுவகை சுரங்களும், தொன்று தொட்டு இசைத்தமிழில் அறிவியல் முறைப்படி பாகுபடுத்தப்பட்ட இசைக் கூறுகளாக இருந்துவருகின்றன சிலப்பதிகாரத்தில் பண் களின் பெயர்களாக அறிகிறோம். தேவார காலத்தில் உருப்படிகப் பெற்றுப் போற்றி வரப்படுவன. இவ்வாறு பழைய உருப்படிக ளாகப் பெற்றுப் போற்றியுள்ளவை சென்ற நூற்றாண்டில் தோன்றி யவை அல்ல. அவை, ஆயிரத்து இருநூறுஆண்டுகளுக்கு முற் பட்டவை. ''மனிதனுடைய சரித்திரத்தில் ஆயிரத்து இருநூறு வருடங்களுக்குள் எந்தவிதமான சாத்திரிய சங்கீதமும் -Classical Music- இதர தேசங்களில் இருந்தது என்று கூறுவதற்குப் போது மான சான்றுகள் இல்லை'' என்று இசைக்கலைப் பேராசிரியர் திரு சாம்பமூர்த்தி கூறுகிறார். இதனால், பழந்தமிழ் இசையின் தொன் மையும் சிறப்பும் புலனாகின்றது.

காலப் போக்கில் பழந்தமிழிசையில் திரிபுகளும் மாற்றங்களும் உண்டாயின. 'கருநாடக இசை' எனும் புதிய பெயரினை அது பெற்றது. கருநாடக சங்கீதம் என்று வழங்கும் தென்னாட்டு இசைக்கலை தமிழ் மக்களின் பரம்பரைச் சொத்து சிலப்பதிகாரக் காலத்துக்கு முன்னாலிருந்து தமிழ்நாட்டில் இந்த இசைக்கலை உருவம்பெற்று வளர்த்து வந்தது''[10] என்று அறிஞர் இரா. கிருட் டினமூர்த்தி (கல்கி) தெளிவுறுத்தியுள்ளார். எனவே, கருநாடக சங்கீதம் என்பது தமிழிசைக்குப் பிறமொழியாளர் வைத்த பெயர் என்பது தெரிய வருகிறது.

### 7. நாட்டியக்கலை:

பாரத நாட்டின் மற்றொரு சிறப்புமிக்க கலை பரத நாட்டியம். கலைகள் பலவற்றிற்கு அடிப்படையாகவும் தொன்மையானதாக வும் உள்ளது நாட்டியக்கலை. உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சி களையும் கருத்துகளையும் உடற்கூற்று அசைவுகளில் வாயிலாகப் புறத்தார்க்குப் புலப்படுத்துவதே இக்கலையின் நோக்கம். முகக் குறிப்பு, கண்குறிப்பு, கைக்குறிப்பு என்னும் பகுதிகளைக் கொண்ட நாட்டியக் கலையோடு இசையைக் கலந்து பேரின்பத்தை அளிக் கிறது பரத நாட்டியம். எண்வகை மெய்ப்பாடுகளை இக்கலையில்

10. தமிழிசை மாநாட்டு ஐந்தாவது மலர், 1947. பக். 4.

உயிர் நாடி. இக்கலை கோயில்களில் நடத்துவதற்காகவே தோற்றுவிக்கப்பட்டது. கோயிலில் பயன்படுத்தப்படும் சிற்பக் கலை, படிமக்கலை, இசைக்கலை ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பும் இசைவும் கொண்டது நாட்டியக்கலை. நாட்டியக் கலையைப் போற்றி வளர்த்தது மட்டும் அல்லாமல், இன்றைக்கு அக்கலைக்கு ஒரு புது வாழ்வினை அளித்து உலகப் பெருங்கலை யாக அதனை மாற்றி வருகின்றவர்களும் தமிழர்களேயாவர்.

இவ்வழகுக்கலை தோன்றி வளர்ந்தது தமிழ் நாட்டில். ஆனால், இக்கலையின் நுட்பத்தை அறிவியல் முறைப்படி ஆராய்ந்து, 'நாட்டிய சாத்திரத்தை' பரதர் என்ற பெரியார் வட மொழியில் எழுதியுள்ளார். 'நாட்டியம்' எனும் சொல், 'நிருத்' எனும் பிராகிருத மொழியின் வேர்ச் சொல்லிலிருந்த நிருத்த, நிருத் திய, நாட்டியஎன்று திரிந்திருப்பதாக மொழியியல் அறிஞர்கள்[11] கூறுகின்றனர். மேலும் பரத முனிவர் தென்னாட்டைச் சேர்ந்த வர் என்றும், அவர் ஆரியரல்லாத இந்தியப் பழங்குடி மக்கள் இனத்தைச் சேர்ந்தவர் என்றும், தம் காலத்திய நிலைமைக்கேற்ப வடமொழியில் நாட்டிய சாத்திரத்தை அவர் இயற்றியருளினார் என்றும் வடமொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[12]

தென்னாட்டில் நாட்டியக் கலை தெய்வீகக் கலையாகப் போற்றி வளர்க்கப்பட்டு வருவதைக் கல்வெட்டுகளும், இலக்கியங் களும் எடுத்தியம்புகின்றன.

இந்தியாவில், வளர்க்கப்பட்டுள்ள நாட்டியக்கலைகள் அனைத் திலும், பரத நாட்டியக்கலை தலைசிறந்ததாகும். இதனுடைய தொன்மைச் சிறப்பும் ஏற்றமும் எழிலும் பிற நாட்டியக் கலைகளில காணப்படவில்லை. பரத நாட்டியத்தின் மேன்மையையும், சிறப் பையும், அதனுடைய 'பெண்களாகக் கருதத்தக்க இந்தியாவின் பிற நாட்டியக் கலைகளில் காண்பது அரிது'' என்று பரத நாட்டி யக் கலையின் தன்னிகரற்ற தலைவியாக விளங்கும் திருமதி உருக்கு மணி தேவி[13] அவர்கள் மொழிந்துள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

---

11. F. B. Kuiper., Indian Linguistic's, Vol 16 (1955) P. 104.
12 Dr. V. Indhu Shekar., Sanskrit Drama, PP 25, 32
13. Rukmani Devi., Bharata Natyam, The South Indian Classical Dance - Tamil Culture.. Vol. 2. P. 138.

8 சிற்பக் கலை:

இந்தியக் கலையின் முழுமையான வளர்ச்சியில், திராவிட மக்களின் கலைப்படைப்புகள் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. எளிதில் வேறுபாட்டைக் கண்டறியக் கூடிய வகையில் திராவிடக் கலைப்பாணி, தற்சார்புடைய தனியியல்புகளையும் கலையுணர்வுகளையும் உடையதாய் இருந்துவருகிறது இவ்வேற்றுமைப் பண்புகளைச் சிறப்பாக நாம் கட்டடக் கலையிலும், தெய்வத் திருவுருவங்களை அமைக்கும் படிமக் கலையிலும் மிகப் பேரளவில் காணலாம். இவை இந்தியா முழுமைக்கும் பொதுவான சமயத்துறைப் பயன்மதிப்புக்களையும், உருவச்சிலை வடிவக் கூறுகளையும் முற்றிலும் புறக்கணித்துவிடவில்லை என்பது உண்மை. ஆயினும் திராவிடக் கலைமுறையில் தனிச்சிறப்புமிக்க கலைப் பாணிகளும், உருவச் சிலைகளின் அமைப்பில் இந்தியாவில் வேறெந்த பகுதியிலும் காணமுடியாத இயக்கமும், நெகிழ்வும் கொண்ட சிறப்பியல்புகளும் இடம்பெற்றுள்ளதை நாம் மறுக்க முடியாது.

பாரதக் கலையின் பல்வேறுபகுதிகளோடு திராவிடக் கலையின் பல்வேறு பகுதிகளோடு திராவிடக் கலையின் வளர்ச்சியைத் தொடர்புபடுத்தாமல், அதைத் தனியாகத் தென்னாட்டு வரலாற்றின் அடிப்படையில் ஆராய்கிறபொழுது, திராவிடக்கலை இயல்புகள் மிகப் பேரளவில் தெளிவும் பொலிவும் பெற்றுத் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன.[14]

தென்னாட்டுக் கோயிற் சிற்பங்கள் உலகத்தையே இன்று வியப்படையச் செய்கின்றன, கால இடையீடு இல்லாமல் சிற்பக் கலை தென்னாட்டில் தொடர்ந்து வளர்ச்சியுற்றிருப்பதைக் காணலாம். பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து சிற்பக் கலை போற்றி வளர்க்கப்பட்டதன் விளைவாக, யாதொரு கட்டுப்பாடு இன்றி இயங்கும் வடிவங்களைப் படிப்படியாக அமைக்க தமிழகச் சிற்பிகள் கற்றனர். துணிவுமிக்க ஆக்க வேலையும் சரியான இசைவுப் பொருத்தமும் கண்டாரை வியப்படையச் செய்யும் வகையில் திராவிட சிற்பங்களில் இடம் பெற்றுள்ளன. சிற்பங்களை வடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் யாதாக இருந்தாலும், அதில் ஒரு குழைவுத்தன்மையையும், நெளிவு சுளிவுகளையும் நாம் காண்கிறோம். நெகிழ்ச்சியும், இழைவும் குழைவும், அழுத்தமின்றிப் பரவலாகக் கலைநுட்பத்தைப் பயன்படுத்தலும், இயற்கையே

14. Mario Bursagli, Dravidian]Art in Encyclop(a)edia of world Art Vol IV P. 443.

கடவுள் என்ற கொள்கையையும் திராவிட சிற்பக்கலையின் முதன்மையான இயல்புகளாகும். மண்ணக வாழ்வை அடிப்படையாகக் கொண்டு, விண்ணகத்தை நோக்கிச் செல்லுவதாகத் தமிழருடைய சிற்பக்கலை விளங்குகிறது. திராவிடக் கலையியலில் கலையுணர்வைவிட, சமயவுணர்வு சிறப்பிடம் பெற்றுள்ளதை யாரும் மறுக்கமுடியாது. அழகினைத் தூய்மையின் மூலந்தான் பெறமுடியும் என்ற நம்பிக்கை தமிழகத்துச் சிற்பிகளிடத்து நெடுங்காலமாக இருந்து வருவதை அவை அறிவிக்கின்றன.

மாமல்லபுரத்துச் சிற்பங்கள் கல்லிலே இழைக்கப்பெற்ற காப்பியங்களாகும். பல்லவர் சிற்பக்கலையில் அடைந்த மாபெரும் வெற்றிக்கு–சாதனைக்கு இவை அழியாதப் பெரும் சான்றுகளாகும். பாறைகளில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் தென்னிந்திய சிற்ப வடிவங்களின் களஞ்சியமாக காட்சி தருகின்றன. அவை கட்டுப்பாட்டுணர்ச்சிக்குக் கட்டுப்பட்ட நேர்மையான கலைப்பாணி யுடையன. பெரிதும் பயன்படுத்தப்படாத இயற்கைக் கொள்கையும் (**Naturalism**) அதில் இடம்பெற்றிருக்கிறது. ஆனால், அது தென்னிந்தியச் சிற்பக் கலையின் தனிச்சிறப்பு மிக்கப் பண்பாக விளங்குகிறது''[15]

'கங்கையின் தோற்றம்' எனும் பாறைச்சிற்பங்கள் பல்லவர் கலைச்சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பல்லவர்க லைப்பாணியில் அமைந்த சிற்பங்களுள் இவை முதன்மையானவை. மான், குரங்கு, யானை எருது போன்ற விலங்குகள் திறமை வாய்ந்த சிற்பங்களின் கைவண்ணத்தால் பொன்றாப் பெருவாழ்வைப் பெற்றுள்ளன. விலங்குகளின் உடற்கூற்று அமைப்பழகில் இத்தகைய உயிர்க்களையும், தன்மை நவிற்சிமிக்க அழகையும், அழகுணர்வோடு அமைந்த கலைப்பாணியையும் நாம் இந்தியாவின் வேறெந்தப் பகுதியிலும் காண்பதரிது புதுமையும், அழகும் பொருந்திய கலையியல் கொள்கை கைவரப்பெற்று இந்தியக்கலை இங்குத்தான் முழுமலர்ச்சி அடைந்துள்ளதைக் காணுகின்றோம். மனிதவடிவின் இலட்சியத்தோற்றம் பல்லவர்களுடைய காலைப் படைப்புகளிலே தலைசிறந்து விளங்குவதோடு, இந்திய சிற்பங்களிலேயே ஒப்புயர்வற்றதாகவும் உள்ளத்தை நெகிழ்விப்பதாகவும் உள்ளன.[16]

நிலைபேறற்ற உலகியல் வாழ்வில் நிலையான மதிப்பினைச்

---

15. Dr. Stella Kramlisch. The Art of India P. 38.
16. Dr. Limmer. The Art of Indian Asia P. 87.

சோழர் காலத்திய சிற்பங்கள்பெற்றுள்ளன. ஆடையணிகள் உடலோடு பொருந்தியுள்ள காட்சி உடலுக்கு இயல்பான பொலிவை அளிப்பதோடு, நுட்பமான கலைநயம் பொருந்தியனவாக உள்ளன. வடிவங்களின் அமைப்புமுறையில் கலையுணர்வு நாட்டமும், உடலுறுப்புக்களின் நெளிவுசுளிவுகளில் உள்ள நேர்த்தியும் நெகிழ்ச்சியும் சிறப்புமிக்க இவற்றோடு, ஒருவகைப் புதுமைப்பொலிவும் சேர்ந்து சோழர்கால சிற்பக்கலைக்குப் பொன்றாப் புகழைத்தேடித் தந்துள்ளன.

திருக்கோயில்களின் கருவறையைச் சுற்றிலும் சுவர்களிலுள்ள மாடங்களில் பல தெய்வத் திருமேனிகள் சோழர்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. கங்கைகொண்ட சோழீச்சுரத்தின் தெற்குப் பிரகாரத்தில், கலைமகளின் கவின்மிகு சிற்பம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. நல்ல பெருமிதமான தோற்றம்; அமைதி நிலவும் சாந்த வடிவம்; நீண்டுயர்ந்த மணிமகுடம் தலையை அழகுபடுத்துகிறது; வெள்ளைத் தாமரையில் அவள் வீற்றிருக்கும் திருக்கோலம் அன்பர் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தளிக்கிறது. இது புடைப்புச் சிற்ப முறையில் அமைந்திருப்பதால் பேரழகுடன் பொலிவுறுகிறது.

திருவரங்கத்தில் வேணுகோபாலன் கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் உள்ள ஒரு மாடக்குழியின் கல்லில், கற்பனைப் பெண் ஒருத்தி நிற்கின்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ளாள். அவள் நிற்கின்ற நேர்த்தி, கையில் கண்ணாடி ஏந்தியிருக்கிற எழில், அணிந்திருக்கும் அணிகளின் அழகு, இதழ்களிலே தவழும் புன்னகை காண்பவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதாகும். இதைப்போன்ற எண்ணற்ற சிற்பங்கள் இக்காலத்திய கலைப்பாணியை உலகிற்கு எடுத்துரைக்கின்றன.

### 9. கட்டடக்கலை:

இந்திய கட்டடக்கலை முறையில் தென்னாட்டுக் கட்டடக் கலை தனிச்சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது. தென்னிந்திய கட்டடக்கலை முறையைத் 'திராவிடக் கட்டடக் கலைமுறை' என்பர் மு. வே. தூப்ராய் (Jouvan & Dubreai) தமிழகம் திருக்கோயில்கள் நிறைந்த திருநாடு என்று அறிஞர்களால் போற்றப் படுகிறது. அத்திருக்கோயில்களினுடைய விமானங்களின் அமைப்பும், அழகும் தமிழகத்திற்கேயுரிய புதிய கலைப்பாணியை அடிப் படையாகக் கொண்டுள்ளன. பிரமிட் போன்றப் பட்டைகோபுரத் தோற்றத்தோடு வானுற உயர்ந்து விளங்கும் இக்கோபுரங்களைத் 'திராவிட கலைப்பாணி கோபுரங்கள்' என்று பழைய சிற்ப

நூல்களே கூறுகின்றன. கோயில் கட்டடக்கலை பல்லவர் காலத்தில் குகைக்கோயில்களாக அரும்பி, சோழர் காலத்தில் விண்ணைத் தீண்டித் தழுவும் மாபெரும் கோயில்களாக மலர்ச்சியுற்றது. பல்லவர் காலத்திய கோயில்கள் எளிமையின் எழிலும், அடக்கமான அமைப்பு முறையின் அழகும் உடையன. மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாமல்லபுரம் முதலிய இடங்களிலுள்ள குகைக் கோயில்களும், மாமல்லபுரத்தில் ஒற்றைக் கல்லினால் அமைக்கப் பட்டுள்ள பஞ்சபாண்டவர் தேர்களும் இத்தகையனவாகும். பல்லவர் காலத்திய கட்டுமானக் கோயில்களுள் மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலும், கோயில் கட்டடக்கலையின் வளர்ச்சிக் குரிய சான்றுகளாகும். கட்டடக்கலைப் பாணியில், எளிமையும் அதே சமயத்தில் நேர்த்தியும் வாய்ந்தனவாகத் தமிழகத்துக் கட்டடக்கலை முன்னேற்றம் கண்டதை இக்கோயில்கள் அறிவிக் கின்றன.

சோழர் காலத்திய கோயில்களில் அமைப்பு முறையில் வீறும் ஊற்றமும், அணியழகின் கலைநயமும், தொழில்நுட்பச் சிறப்பும் மேம்பட்டு விளங்குகின்றன. மாபெரும் விமானங்கள் எளிமையின் எழிலைச் சிறிதளவும் இழக்காது, பெருமிதத் தோற்றத்தோடு பேரழகுப் பிழம்பாகப் பொலிகின்றன.

இப்புதிய கலைப்பாணியின் மாண்புமிக்க வடிமாக விளங்குவது தஞ்சைப் பெருவுடையார் கோவில். இக்கோயிலின் விமானம் எகிப்திய பிரமிட்டுகளைப் போன்று மாபெரும் பட்டை கோபுரமாகப் பெருமிதத் தோற்றத்தோடு காணப்படுகின்றது. அவ்விமானம் திண்மையும் உறுதியும் உடையதாய் என்றும் நிலைபெற்று விளங்கும் என்ற நம்பிக்கையூட்டும் வகையில் அமைக்கப்பட்டிருக் கிறது. உண்மையிலேயே, இதுவரை வகுத்தமைக்கப்பட்டுள்ள கோயில் விமானங்களில் நிலையான கட்டுக்கோப்புடையதாகக் காணப்படுவது தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானமே யாகும். ''திராவிடக் கட்டடக் கலைஞரின் நேர்த்திமிக்க படைப்பு களுள் சிறியதளவும் ஐயத்திற்கு இடமின்றித் தலைசிறந்து விளங்குவது இக்கோயிலாகும். தஞ்சைக் கோயிலின் விமானம், இந்தியக் கட்டடக்கலையின் மாட்சியினை அறிய ஓர் உரை கல்லாகவும் விளங்குகிறது.''[17]

தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் போன்ற, ஆனால் சிறிது அடக்கமான அளவில் இராசேந்திர சோழனால், கங்கை

17. Percy Bruwn, Indian Architecture Vol I, P. 141.

கொண்ட சோழபுரத்தில் கட்டப்பட்டுள்ள 'கங்கைகொண்ட சோழீச்சரம்' தஞ்சைக் கோயிலின் கலைப்பாணியைப் பெரிதும் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும். ஓரளவிற்கு அதன் அமைப்புமுறைகளிலும், கட்டடக்கலை நயத்திலும் நுட்பமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஆண்மையின் வீறு விளங்குகிற தென்றால், கங்கைகொண்ட சோழீச்சுரத்தில் பெண்மையின் பேரெழில் பொங்கி வழிகிறது எனக் கூறலாம். கவர்ச்சிமிக்க பல்வகை அழகிய வேலைப்பாடுகளையுடையதாக இக்கோயில் விளங்குகிறது.

தாராசுரத்திலுள்ள ஐராவதேசுரர் கோயிலும், திருபுவனத்திலுள்ள கம்பேசுவரர் கோயிலும் சோழர் கலைப்பாணியின் பிற்கால இயல்புகளை நன்கு புலப்படுத்துகின்றன. நுணுக்கமான வேலைப்பாடுகள் மிகுதியாக வளர்ந்துள்ளன. கோயில்களின் தலைவாயிலில் விண்ணைமுட்டும் கோபுரங்கள் சிற்பக்கலைக் களஞ்சியமாக விளங்குமாறு கட்டப்பட்டுள்ளன. இத்தகைய கோபுரங்கள் சிதம்பரம், மதுரை, திருவண்ணாமலை முதலிய ஊர்களிலுள்ள கோயில்களில் காணலாம். இவற்றுக்கு ஈடாகக் கலை நயம் வாய்ந்த கோபுரங்கள் இந்தியாவிலேயே இல்லை என்பது திண்ணம்.

## 10. படிமக்கலை:

தமிழகத்தின் கலைப்பொருளில் வெண்கலச்சிலைகள் தலைச்சிறந்தவை என்றும், தன்னிகரற்றவை என்றும் உலகப் பேரறிஞர்கள் பலர் ஒருமனதாகக் கூறிவருகின்றனர். இந்தியாவிலேயே தமிழகத்துச் சிற்பங்கள் இத்துறையில் ஈடுமிணையு மற்றமாபெரும் சாதனைகளாகிப் பல அரிய தெய்வத்திருமேனிகளைப் படைத்துள்ளனர். கற்சிற்பங்களைப் போலவே இவையும் மிகத்தொன்மையான கலைமரபினைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ள, இவ்வெண்கலச் சிலைகள் சோழர்காலத்திலேயே மிகப் பேரளவில் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் அழுத்தம், பெருமிதம், அடக்கமான நுண்ணயமிக்க வேலைப்பாடு, உயிர்த்துடிப்பு முதலிய பண்புகள் பொருந்தியுள்ளன. அவற்றின் நிலையிலும் இயற்கை எழில் முழுமைத் தன்மையுடையதாய் பொலிவுறுகிறது. அணிகள் அழகாகவும் அளவாகவும் செதுக்கப்பட்டுள்ளன.

பக்திநெறியையும் அதனால் ஏற்படுவனகிய மனவுணர்ச்சியையும் இத்திருவுருவங்கள் மிக்கநயம்பட விளங்குகின்றன. உண்மையான பக்தியில் ஈடுபட்டுள்ள ஓர் அடியாரது உள்ளமும் உடலும் எந்நிலையில் இருக்குமென்பதைத் தமிழகத்து அருளாளர்களான

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் முதலியோருடைய உருவச் சிலைகள் தெளிவாக உணர்த்துகின்றன.

இத்தகைய வெண்கலச் சிலைகளிலே ஒப்புயர்வற்ற நடராசர் பெருமானின் திருவுருவம், கலையழகிலும் மெய்ப்பொருள் கருத்திலும், சிறப்புற்று விளங்குவது இத்திருவுருவம். தெய்வீக உண்மையையும், அழகையும் இன்பத்தையும் வடித்தெடுத்த தமிழகக் கலைஞர்கள், நடராச வடிவத்தை ஒரு கலைப் பிழம்பாக உலகிற்கு அளித்துள்ளனர்.

அம்பலவாணரின் அருள் வடிவம், பேரின்பமாகிய சிவபோகத்தைக் குறிக்கிறது. மேலும் சிவபெருமானே படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் எனும் ஐந்து தொழில்களையும் முறையே நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம் எனும் ஐவகை மூர்த்திகளின் வழியாகச் செய்துவருகின்றார் என்பதையும் இத்திருவுருவம் உணர்த்துகிறது. உடுக்கை ஏந்திய உலகப் படைப்பையும், அருள்புரியும்கை காத்தலையும், தீயேந்திய கை மும்மலத்தை அழிப்பதையும், ஊன்றிய திருவடி ஆன்மாக்களை மறைத்தலையும், தூக்கிய திருவடி ஆன்மாக்களின் புகலிடம் இதுவென்று காட்டுதலையும் குறிப்பதாக இவற்றிற்கு மெய்ப்பொருள் விளக்கம் தரப்படும். இதனை,

''தோற்றந் துடியதனிற்; தோயும் திதியமைப்பிற்;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
வூன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்; முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு''

என்று உண்மை விளக்கம் கூறுதல் காண்க.

இறைவன் உயிர்த்துடிப்பாகவும், ஒழுங்கான இயக்கமாகவும், அழியாத இளமை யெழிலாகவும், கட்புலனாகப் பேரொளியாகவும் விளங்குகிறான் என்பதையே, இந்நடராசத் திருவுருவம் உணர்த்துகிறது. சமயச் சூழ்நிலையில் இவ்வடிவத்தின் உட்பொருளை ஒருமுறை புரிந்து கொண்டால் நடராசப்பெருமானின் அழகிய திருவுருவத்தில் ஐரோப்பியர்கள்கூட உண்மையான சமய உணர்வைப் பெறமுடியும் தெய்வீக உண்மையையும், தெய்வீக அழகையும், தெய்வீக இன்பத்தையும் உணர்த்தும் கலைப்பிழம்பே மாண்புமிக்க நடராசர் திருமேனி''[18] என்பது இங்கு நினைவுகூர்தற்கு உரியதாகும்.

---

18. Dr. A. L. Basham , The Wonder That was India, P. 375. 376.

இந்திய நாகரிகம் என்றவுடன் உலகிலுள்ள அறிஞர்கள் பலருடைய உள்ளத்தில், தமிழ்க் கலைஞர்கள் 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன். இவன் இறைவன் என்றெழுதிக் காட்ட' இயலாத இறைவனுக்குக் கற்பித்து நடராச வடிவே தோன்றுவதாகக் கூறுகின்றனர். எனவே, ஒரு கூட்டத்தார்க்காவது, ஒரு நூற்றாண்டைச் சார்ந்த, சிந்தனையாளர்க்காவது ஏற்படைத்தாத்தாகலின்றி, எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் வாழக் கூடிய மெய்யறிவாளர்களாலும், இறையன்பர்களாலும், கலைஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் வண்ணம் மெய்ப்பொருட் குறிப்பும் சமயவுணர்வும், கலையழகும் அறிவியல் கொள்கையும் இணைந்தும் இழைந்தும் விளங்கும் பேரெழில் மிக்க கலைப்பிழம்பாகிய இவ் வடிவத்தை, முதலில் நமது உள்ளக்கிழியிலே வரைந்த மெய்யுணர்வு பெற்ற கலைஞர்களின் ஆழ்ந்த சிந்தனா சக்தியும் அருள் உணர்வும் வியப்பையும் விம்மிதத்தையும் நமக்கு அளிக்கின்றன.[19]

## 11. வான நூற்கலை:

தமிழ் ஆண்டுத் தொகுப்பு முறை, வானநூல் ஆராய்ச்சிக்கு நல்ல தூண்டுதல் தரத்தக்கதாயுள்ளது. இன்று இத்துறையில் இரண்டு முறைகள் வழங்குகின்றன. ஒன்று சமயத்தைச் சார்ந்தது; மற்றொன்று வாழ்க்கைத் துறையைச் சார்ந்தது. சமயத்துறை சார்ந்த ஆண்டுத் தொகுப்புமுறை தெலுங்குப் பஞ்சாங்கம் உட்பட எல்லா ஆசியப் பஞ்சாங்களையும் போலவே, மதிமுறை சார்ந்தது. இதுபற்றித் தனிப்படக் குறிப்பிட எதுவுமில்லை. ஆனால், சமயஞ் சாராத ஆண்டுத் தொகுப்பு ஞாயிற்றுச் சார்பானது மட்டுமன்று; முழுநிறை முறையிலேயே ஞாயிற்று வழியாய் அமைவது. அது மேனாட்டு முறைபோல, மதிய முறைப்படி முதலில் கணிக்கப்பட்ட மாதத்தை' ஞாயிற்று முறைப்படி கணித்த ஆண்டுடன் பிற்காலத்தில் கொண்டு ஒட்டவைத்த முறையல்ல சற்றும் மட்டுமழுக்கலில்லாமல் அது வியக்கத்தக்க வகையில் முளைத்5 ஞாயிற்று முறையாயுள்ளது. ஏனெனில், அது ஒரு மாதத்தை இத்தனை முழு நாட்கள் என்றுகூட வகுத்தமைப்பதில்லை.

வான் மண்டலம், பன்னிரண்டு மனையகங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. ஞாயிறு ஒரு புது மனையகத்தில் புகும் நேரம் காலையிலும் சரி, நண்பகலாயினும் சரி, இரவாயினும் சரி, அந்தக் கணத்திலேயே மாதம் பிறக்கிறது. நாட்களும் ஞாயிற்றெழுச்சியுடன் தொடங்குகிறது. ஆனால், ஞாயிற்றெழுச்சி என்பதும் இந்தியா

19. Dr. Ananda K. Coomaraswamy., The Dance of Shiva. P. 65.

வில் ஏதேனும் ஒரு பகுதியில் ஞாயிறு தோன்றும் வேளையன்று. உலக நாடு நேர்கோட்டில் (Equator), நடுநிரைக்கோடு (Meridian) அக்கோட்டுடன் சந்திக்கும் ஒரு குறிப்பிட்ட இலக்கில் ஞாயிறெழும் வேளையாகவே அது அமைந்துள்ளது. தமிழர் தமக்கென்று வகுத்த இந்த நடுநிரைக்கோடு தமிழர் பண்டை வானாராய்ச்சி நிலையம் அமைந்திருந்த இடத்துக்கு நேராய் இருந்ததாக அறிகிறோம்.

உலகில் இத்தனியுயர் சிறப்புக்குரிய ஆண்டுக் கணிப்புமுறை திராவிடர்க்கு எப்போது ஏற்பட்டது என்று, எவரேனும் காலவரையறை கண்டுணர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் தனியுயர் சிறப்புடையதென்பதும் ... ... ... ... ... ... ... ... மற்றெல்லா ஆண்டுத் தொகுப்பு முறைகளைவிட அது துல்லியமான வானிலைக் கணிப்பைக் குறியாகக் கொண்டுள்ளது என்பதும் தனிப்படக் குறிப்பிடத்தக்கன. இந்தியாவிலேயே, திராவிடமல்லாப் பண்புகளின் தலையீடில்லாத பகுதியிலேயே — அதாவது தமிழகத்திலேயே — திராவிட அறிவு நூல்கள் முழுத் தற்சார்புடன் தொடர்ச்சியான வளர்ச்சிபெற்றிருந்தன என்பதை இது காட்டுகிறது'' என்பர் கில்பர்ட்டு சுலேட்டர்.[20]

12. மருத்துவக்கலை:

மருத்துவகலையிலும் இந்தியா தொன்றுதொட்டே சிறப்புற்று விளங்கி வருகிறது. ஆயுர்வேதம், சித்தமருத்துவம் எனும் இரு வகை மரபுகளையுடையது இந்திய மருத்துவம் இவற்றில் சித்த மருத்துவம் தமிழகத்திற்கேயுரிய தனிப்பெரும் செல்வமாகும். சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர்கள் பலர், வாழையடி வாழையாகத் தமிழகத்தில் தோன்றியுள்ளனர். அவர்கள் சின்னாள் பல்பிணியுடைய மக்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்குரிய வழிவகுத்துக் கொடுத்துள்ளனர். இறையின் பத்தில் திளைப்பதற்கு மனித உடல் நோயற்றதாக இருக்கவேண்டும் என்பதை அவர்கள் நன்குணர்ந்து இருந்தனர் என்பதனை,

'உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே'

—(திருமந்திரம், 725)

என்னும் திருமந்திரத்தால் அறிகிறோம்.

---

20. கில்பர்ட்டு சுலேட்டர்: இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு ப. 63-64. தமிழாக்கம்: (கா. அப்பாத்துரை)

எனவே, 'உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு, ஆலயம்' என்று அவர்கள் கருதிய காரணத்தினால் அவ்வுடம்பு வளமாகவும் நலமாகவும், நெடுங்காலம் அழியாமல் இருப்பதற்கு அச்சான்றோர்கள் ஒரு மருத்துவ நெறியினை உலகிற்கு அளித்தனர். பச்சிலைகளையும், வேர்களையும் மருந்துகளாகப் பயன்படுத்தித் தீராத வினைகள் எல்லாவற்றையும் தீர்ப்பதிலே அவர்கள் வெற்றி கண்டுள்ளனர். நாடி பிடித்துப் பார்ப்பதன் மூலம் நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணத்தை ஆராய்ந்து அதைத்தணிக்கும் வழியையும் ஆராய்ந்து உடலுக்குப் பொருந்தும் படியாக அவர்கள் மருந்துகளைக் கொடுத்துவந்தனர். அறுவை மருத்துவம் செய்யாமலேயே மருந்துகளின் மூலம் பலவகை நோய்களைக் குணப்படுத்தும் கலையில் சித்தர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். அச்சித்தர்கள் சிறப்புமிக்க மருத்துவ நூல்கள் பலவற்றை எழுதியுள்ளனர். அவர்களுள் போகரும், புலிப்பாணி முதலியோரும் சிறப்புடையவர்களாக கருதப்படுகின்றனர். அவர்கள் பெயரால் பல மருந்துவ நூல்கள் இன்றும் வழக்கிலிருந்து வருகின்றன. இம்மருத்துவக்கலை இன்றும் தமிழகத்திற் தழைத்து விளங்குகிறது. சித்தர்கள் கண்ட மருத்துவக்கலை, சித்த மருத்துவம் எனப்படும் அக்கலை தமிழர்கள் உலகிற்கு அளித்த ஒப்பற்ற மருத்துவக்கலை என்பதனைத் 'தமிழ் மார்க்கம் (நெறி) என்னும் தொடரால் சான்றோர்கள் போற்றியுள்ளனர்.

> ''மூப்புற் றுச் செவி......................
> வாய்ப்புற் றத்தமிழ் மார்க்கத் திட்பொருள்
> வாய்க்கும் கந்த முருகோனே''

என்று அருணகிரிநாதரால் பாராட்டப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

## 13. தெய்வங்கள்:

ஒவ்வொரு தேசிய இனத்தின் வாழ்விலும் வரலாற்றிலும் சமயம் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருப்பதைக்காணலாம். இந்திய நாகரிகத்தின் உயிர்நாடியாக இருப்பது இதனுடைய சமயமாகும். தொல்பழங்காலம் முதற்கொண்டு இந்நாட்டில் வாழ்ந்துவரும் பல்வேறினத்தைச் சேர்ந்த இந்திய மக்களின் எண்ணங்களும் சிந்தனைகளும் ஒன்றாக இணைந்ததன் விளைவாகத்தோன்றியதே இன்றைய இந்திய சமயமென்றால், அது மிகையாகாது. ''இந்திய சமயத்தை, நாம் திராவிடசமயம் என்று சொல்லுவதே மிகவும் பொருத்தமாகும். ஆரியப் படையெடுப்பாளர்களின் கருத்துக்களினால், அச்சமயம் ஓரளவிற்கு மாற்றமும் திருத்தமும் பெற்றிருக்கலாம், இந்து சமயத்தின் மாண்புமிக்க தெய்வங்களான முருகன், சிவன், கண்ணன், கொற்றவை,

திராவிட மக்களின் தெய்வங்கள் என்பதில் கருத்து வேற்றுமைக்கே இடமில்லை. மேலும், இந்து சமயத்தின் சிறப்புமிக்க கோட்பாடுகள் சிலவும், ஊழைப்பற்றிய கருத்துகளும், பக்திநெறியும் வேதங்களில் இடம்பெறவில்லை. எனவே, நன்கு முதிர்ச்சியடைந்துள்ள இந்திய சமயத்தின் முதன்மையான பண்புகள் அனைத்தும், தனிப்பட்ட ஓரிடத்திற்கு நாட்டிற்குரியதே ஒழிய, தனிப்பட்ட ஓரினத்திற்கு உரியதல்ல என்பது தெளிவாகிறது - அவை, பாரசீக நாட்டின் சமயத்திலோ, கிரேக்க நாட்டுச் சமயத்திலோ பிற ஆரிய மக்கள் வாழும் நாடுகளிலுள்ள சமயங்களிலோ காணப்படவில்லை.''[21]

இந்திய நாகரிகம் அரும்பத் தொடங்கிய காலத்திலேயே திராவிடமக்களின் சமய நம்பிக்கைகளும், வழிபாட்டு நெறிகளும், பழக்கவழக்கங்களும் ஆரியருடைய சமய வாழ்க்கையில் கலந்துவிட்ட காரணத்தால், அவற்றை எளிதில் இனம் கண்டறிய முடியவில்லை. ஆனால், ஐரோப்பிய, ஆரியர், இந்து ஆரியர்களின் சமயங்கள் ஒரேவகையானவையாக இருக்கவில்லை. இன்றைய அல்லது வேதகால ஆரிய சமயத்திலிருந்து இந்து ஐரோப்பியருக்கும், இந்து ஆரியர்களுக்கும், பொதுவான சமயக்கொள்கைகளைக் கொண்டு ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள், வேதகாலத்திலேயே திராவிடர்களுடைய சமயக்கொள்கைகள் ஆரியமதத்தை தன் வண்ணமாகத் திரிக்கத் தலைப்பட்டுவிட்டன என்று மொழிகின்றனர்.[22]

---

21. Sir Charles Elliot Hinduism & Buddhism P. XV.

22. It is not generally admitted that a great deal of the ancient and mediaeual myth and legend enshrined in the Sanskrit epics and Puranas is of Non-Aryan origin, and that even in Vedic Mythology certain. Pre-Aryan elements are present. Puranic myths of the gods and legends of Kings, heroes and sages, in the form in which we find them in the sanskrit words, represents undoubtly a considreably amount of modifications form other orginal forms whether Aryans or Non-Aryans.

—Dr. S. K. Chatterji,

Cultural Synthesis in the Bulletin of the School of Oriental and African Studies, Vol IV. (1935 ,37) P.122.

தமிழகம் இந்து சமயத்திற்கு வழங்கியுள்ள மாபுண்மிக்க பரிசு முழுமுதற்பொருளாகிய சிவபெருமானைப் பற்றிய கருத்துகளாகும். இருக்குவேதத்தில் அழித்தற்கடவுளாக விளங்கும் உருத்திரன் வேறு. அன்பின் ஊற்றாய், அழகின் உறைவிடமாய், அறிவுக் களஞ்சியமாய் அருளே வடிவமாய் விளங்கும் சைவசமயத்தின் சிவன் வேறு. ஆரியரும் திராவிடர்களும் காலப் போக்கில் கொண்ட நெருங்கிய தொடர்பின் விளைவாகவும், நாகரிகப் பண்பாட்டில் உண்டான கலப்பின் காரணமாகவும் தோன்றியதே 'பரமசிவம்' எனும் பெருந்தெய்வமாகும். ஆரிய திராவிடப் பண்பாட்டின் கூறுகள் பலதுறைகளில் கலந்து, ஒரு புதிய கலவை நாகரிகத்தை உருவாக்கியதைப் போன்றே, சமயத்துறையிலும் புதியதொரு 'கலவைச்சமயம்' உருவாக்கப்பட்டது. அச்சமயத்தை இன்று 'இந்துசமயம்' என்ற பெயரால் உலகம் போற்றுகிறது இத் தகைய நாகரிகக் கலப்புண்டான காலத்தில், ஆரியருடைய 'உருத் திரனின்' பண்புகளையும், தமிழருடைய 'சிவபெருமானின்' பண்பு களையும் ஒன்றாகச் சேர்த்துப் புதிய வடிவில் தலைசிறந்த பண்பு களைக் கொண்ட ஓர் ஒப்பற்ற 'பரம்பொருளைப் பண்டை இந்தியாவின் சான்றோர்கள் படைத்தளித்தனர்.'[23]

இவ்வாறே, தமிழர்களின் அழகுக்கடவுளாகிய முருகனுடைய பண்புகளோடு, ஆரியர்களுடைய போர்க்கடவுளாகிய கார்த்தி கேயனின் பண்புகளை இணைத்து, 'சுப்பிரமணியன்' எனும் இந்து சமயத்தெய்வத்தை மூதறிஞர்கள் படைத்துள்ளனர். முருகனின் மனைவியாகிய வள்ளியும், கார்த்திகேயனின் துணைவியாகிய தெய்வயானையும், சுப்பிரமணியக்கடவுளின் காதல் கிழத்தியும் பட்டத்தரசியுமாகச் சொல்லப்பட்டனர்.[24]

---

23. Rudra is the lord of the animals and forms the point of linkage between the Vedic religion and the later Siva worship, Siva in the Rig-Veda means that it is not the name of a god the Rudra in the Rig-Veda is a malignant cattle destroying destiny. Here (in Hinduism ) he is the Lord of all cattle ie Pasu patha.

—Dr. A P. Karmarker
The Religion of India, Vol. I. P. 53.
Refer also Dr. Radhakrishnan's
Indian Philosophy, Vol. I., P. 122.

24. P. T. Srinivasa Iyengar., Pre-Aryan Tamil culture., P. 47.

'திருமால்' கரிய நிறமுடையவராகவே போறறப்படுகிறார். 'கிருஷ்ணன்' எனும் சொல்லிற்குப்பொருள் 'கருமை' என்பதாகும். இருக்கு வேதத்தில் 'கிருஷ்ண' என்ற சொல் கருமை, மேகம் எனும் பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில், கரு நிறமுடைய கடவுளைக் குறிப்பிடுவதற்கு, அச்சொல் பயன்பட் டிருத்தல் வேண்டும். வேதங்களில் முழுமுதற் பொருளாகப் போற் றப்பட்ட நாராயணனும், பண்டைத் தமிழ் மக்களால் 'மாயோன்' என்று போற்றி வழிபடப்பட்ட கண்ணனும் ஒரே தெய்வமாகக் கருதப்பட்ட காலத்தில் தோன்றியதே, 'திருமால்' எனப்படும் காத்தல் கடவுளாகும்.[25]

கண்ணனின் காதலியாக நப்பின்னை எனும் நங்கை, பழந் தமிழ் இலக்கியங்களில் சிறப்பாகப் பேசப்படுகிறாள். கண்ணனும் நப்பின்னையும் இணைபிரியாத இலட்சியக் காதலர்களாகத் தமிழ் மக்களால் போற்றப்பட்டுள்ளனர். பிற்காலத்தில், ஆழ்வார்கள் நப்பின்னையைத் திருமாலின் சக்தியாகவே கொண்டு, தொழுது போற்றியுள்ளனர். கண்ணன் நப்பின்னையோடு கூடி ஆடிப்பாடி மகிழ்ந்த இன்பக் களியாட்டங்களைக் 'குரவைக் கூத்து' என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

''மாயவன்றன் முன்னினொடும் வரிவளைக்கைப்
பின்னையொடும்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை
புறஞ்சோர''[26]

என்னும் பாடல் குரவைக் கூத்தின் ஒரு பகுதியாகும்.

தமிழன் கண்ட இலட்சியக் காதலர்களாகிய கண்ணன் நப் பின்னை காதல் விளையாட்டு கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு தென்னிந்தியாவில் இயற்றப்பட்ட பாகவத புராணமும் அரிவம்சமும் கண்ணன் இராதாக் காதல் களியாட்ட மாகத் திரித்துக் கூறுகின்றன. ஆயர்பாடியின் எருமன்றத்தில் மாயவன் நப்பின்னையோடு ஆடிப்பாடி மகிழ்ந்த இன்ப விளை யாட்டை, வடநாட்டுச் சூழலுக்கேற்ப பிருந்தாவனத்தில் கண்ண னும் இராதையும்' கோபியரோடு சேர்ந்து விளையாடிய 'இராசக் கிரீடையாக' அவர்கள் சித்தரித்துள்ளனர். இதனால், தமிழகத்தி லிருந்து வடக்குநோக்கி வீசிய 'பக்தி நெறி' எனும் தென்றல்,

---

25. P. T. Srinivasa Iyengar.
1) Life in the age of the mantras. P. 47
and 2) History of the Tamil, P.

26. சிலப்பதிகாரம், ஆச்சியர் குரவை

பண்டைத் தமிழருடைய காதற் கடவுள் பற்றிய பழங்கதையாகிய நறுமணத்தை வடநாட்டிற் கொண்டுசென்று பரப்பியமை புலனாகிறது.[27]

இவ்விரு பெரும் கடவுளர்களும் ஒரே முழுமுதற் பொருளில் இரு வேறு வடிவங்கள் என்பது தொன்றுதொட்டு தமிழரிடை நிலவி வரும் நம்பிக்கைகளும், திருமாலும் சிவனும் ஒரே தெய்வத்தின் இருவேறு இடவேறுபாடாகும். திருமால் வடபுலத்துக்கும் முல்லை நிலத்திற்கும் சிவன் தென்புலத்துக்கும் மருத நிலத்திற்கும் உரியவராகக் கூடும். ஆனால், மேற்குறிப்பிட்டபடி இரண்டும் வேதத் தெய்வமல்ல.[28]

வட இந்தியாவில் சக்தி வழிபாடு பௌத்த சமயத்தில் 'தாரை' எனும் பெண் தெய்வ வழிபாடு தோன்றிய பிறகு, தோன்றியது. தாய் வழிபாட்டுக்கு எதிராகப் பெண் தெய்வ வழிபாடு இந்து சமயத்தில் செல்வாக்குப் பெற்றது. இருக்கு வேதத்தில் அன்னை வழிபாட்டை பற்றிய குறிப்புகள் ஒன்றும் கிடையாது. உருத்திரனைப் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது 'அம்பகம்' எனும் சொல்லை இருக்கு வேதம் பயன்படுத்துகிறது. ஆனால், பிற்காலத்திய அன்னை வழிபாட்டோடு அது எத்தகைய தொடர்பும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை.[29] யசுர் வேதத்தில்தான் 'அம்பிகை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. தைத்திரீய ஆரண்யகத்தில் முதன்முதலாக உருத்திரன், உமை எனப்படும் அம்பிகையின் கணவராகக் குறிப்பிடப்படுகிறார்.

ஆனால், அன்னை வழிபாடு இந்தியாவில் சிந்துவெளி நாகரிக காலத்திலேயே சிறப்புற்று விளங்கியதை மொகஞ்சதாரோ. ஆரப்பா முதலிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள முத்திரைகள் தெரிவிக்கின்றன. 'உமா' எனும் பெயரைப்பற்றி ஆராய்ந்த வடமொழி அறிஞர்கள், 'வித்தியா' என்னும் பொருளிலேயே அச்சொல் யசுர் வேதத்திலும், உபநிடதங்களிலும் கையாளப்பட்ட

27 (a) V. R. R. Dikshitar. The Purana Index, Vol. II P. 72.
(b) Humayun Kabir, The Indian Heritage. P. 4.
(c) Maxmuller, Chips From the Getma workship, P. 311.

28 கில்பர்ட் ஸ்லேட்டர், இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு, பக். 98.

29 A. P. Karmarkar, Op. cit, P. 96

தாகக் கூறுகின்றனர். தைத்திய ஆரண்யகத்தில் வழங்கப்படும் உமா எனும் சொல் 'அம்மா, எனும் திராவிட மொழிச் சொல்லின் சமற்கிருத ஆக்கமாகவே வடமொழிபெயர் அமைந்திருக்கக்கூடும்[30] என்பர் அறிஞர்.

திராவிட மக்களிடத்தில் முதலில் தோன்றியது அன்னை வழிபாடு. வீரத்திற்கும் வெற்றிக்கும், இனவிருத்திக்கும் செழிப்பிற்கும் காரணம் சக்தியே என்ற நம்பிக்கை பண்டைத் தமிழ் மக்களிடத்து இருந்துவந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்களால் அறிகிறோம். தமிழ்மக்கள் அன்னையினைக் காடுகிழாள். காடுகெழு செல்வி, கொற்றவை. காளி முதலியன பல பெயர்களால் குறிப்பிடுவர். சங்ககாலத்தில் தாய்க்கடவுள் வெற்றிக்குரிய வீர தெய்வமாகவே கருதப்பட்டாள். எனவே, 'கொற்றவை' எனும் பெயரால், அவளைக் குறிப்பிட்டனர். போருக்குச் செல்லும்போது, படை வீரர் வெற்றித்திருவாகிய அன்னையை வழிபட்டுச் செல்லுவர்.

காடுகிழாள் வழிபாடு, மக்கள் மிகத் தாழ்ந்த நிலையில் வேடர்களாக அலைந்து கொண்டிருந்த காலத்தில் உண்டாயிற்று. காடுகிழாள் பாலைநிலத்தெய்வம். இவ்வழிபாடு உயிர்ப்பலி (விலங்கு, மனிதர்) யோடு நடைபெற்றது. ஆனால், சிலப்பதிகார காலத்தில், இவ்வழிபாடு கொடுமை நிறைந்ததாகத் தோன்றவில்லை. தமிழ் மக்களின் அறிவு பண்பட்ட காலத்தில், அன்னைத் தெய்வம் அன்புமயமான தெய்வமாகவும். அருள்வடிவமான தெய்வமாகவும் கருதப்பட்டாள். காடுகிழாள், உமை என்னும் அருட்சக்தியாகக் கொள்ளப்பட்டாள். முருகக்கடவுளைக் ''கொற்றவை சிறுவன்'' என்று திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது.

சக்தி வழிபாட்டுநெறி (சாக்த சமயம்) மேம்பாடுற்ற காலத்தில், 'அன்னையே முழுமுதற்பொருள்' என்ற கொள்கை செல்வாக்கு பெற்றது. நாடெங்கும் சக்திவழிபாடு பெருவழக்காகிய காலத்து, சக்திவழிபாட்டு முறைகளைக் கூறும் சாக்த ஆகமங்கள் தோன்றின. சாக்த ஆகமங்கள் 77 என்பர். சிந்துவெளியில் அரும்பிய சக்தி வழிபாடு, தமிழ்நாட்டில் 'சிவமின்றேல் சக்தியில்லை.' 'சக்தியின்றேல் சிவமில்லை' என்னும் உயர்ந்த சிவசக்தி வழிபாடாக மலர்ந்தது. பின்னர் வடநாட்டில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்ற சக்திவழிபாடு தாந்திரீக சமயத்தோடு பின்னிப்பிணைந்து. பலதிறப்பட்ட சக்திவழிபாடுகளாக சிதறுண்டு போயிற்று. ஆயினும், இந்துசமயத்தில் பெருஞ்சிறப்புடையதாக விளங்கும் சக்திவழிபாட்டு

30, A. P. Karmakar op. cit. P. 101.

நெறி, திராவிட மக்களுடைய அன்னை வழிபாட்டுநெறியின் திருந்திய வடிவமே என்பதை மறக்கவோ, மறுக்கவோ, மறைக்கவோ இயலாது.

14. பக்திநெறி:

இந்துசமய வழிபாட்டு நெறியில் இருவகை முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. தீயினை வளர்த்து, அதன்மூலம் தெய்வ வழிபாட்டை நடத்தும் வேள்வி நெறி, வேதகாலம் முதல் சிறப்பு மிக்க ஒன்றாகப் போற்றப்பட்டு வருகிறது. இதனை நாம் 'வேள்வி நெறி' எனலாம். மற்றொன்று பூவினைக்கொண்டு இறைவனுடைய பொன்னடிகளைப் போற்றி வழிபடுவதாகும். இதனை 'பூசெய்நெறி' என்பர். பூவினைக்கொண்டு இறை வழிபாடு செய்யும் புனிதநெறி வேதகால சமயத்தில் இடம்பெறவே இல்லை. வேள்வி நெறியை 'நிகமம்' (Nigama) என்னும் வடமொழிப் பெயராலும், பூசெய் நெறியை 'ஆகமம்' (Agama) என்னும் வடமொழிப் பெயராலும் சான்றோர்கள் அழைத்து வருகின்றனர்.[31] ஆரியரும் ஆரியரல்லாதாரும் ஒன்றுபட்ட காலத்தில், அவர்களுடைய வழிபாட்டு நெறிகளும் கலப்புற்றன. ஆகமநெறியிலும் வேள்வி இடம் பெறலாயிற்று. ஆயினும், தென்னாட்டுக் கோயில்களில் பேரளவிற்கு இன்றும் 'பூசெய்' நெறியாகிய ஆகம வழிபாட்டு முறையே, பின்பற்றப்பட்டு வருகிறது.

தமிழில் இறைவழிப்பாட்டைக் குறிக்கும் 'பூசை' என்னும் சொல், வடமொழியில் கடன்வாங்கப்பட்டபொழுது 'பூசா' எனத் திரிந்தது. பூசை எனும் சொல், பூசெய் எனும் இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். பூவினைக்கொண்டு செய்யப்படும் வழிபாடு (புட்பகருமம்) என்பது இச்சொல்லிற்குப் பொருள் என்று மொழியியலறிஞர்கள் கூறுவர்.[32]

---

31. Homa or the Fire--Ritual and Puja or the Flower Ritual represent two distinct world of religious thought conception. The Flower Ritual of the puja is unknown to the religion There the ritual is every where homa.

—Dr S K. Chatterji, Racial and Cultural Intermixture in India, Tamil Culture. Vol. 8., P. 319.

32. M. Collins., (ed) Dravidic Studies, Vol IV P. 67.

வேதகாலத்தில் ஆரியர் முத்தீ வளர்க்கும் தீ வழிபாட்டையே செய்துவந்தனர். முத்தீ வழிபாட்டில் தாங்கள் வழிபட்ட இயற்கைச் சக்திகளாக தீ, காற்று, ஞாயிறு, அருணன், இடி, மழை, நிலம், நீர் முதலியவற்றிற்குச் சினம் உண்டாகாமல் தடுப்பதற்காகத் தங்களிடம் இருந்த ஆடுமாடு, பார்லி, பால், வெண்ணெய், கோதுமை, சோமபானம் போன்ற பொருள்களை வேள்வித் தீயில் இட்டு வேள்விசெய்தனர். இதன் மூலம் இவ்வியற்கைச் சக்திகளின் அருளைவேண்டி வணங்கினர். இத்தகைய வழிபாடு மிக எளிமையானது; நாகரிகத்தின் தொடக்க காலத்தில் மக்கள் மேற்கொண்டு ஒழுகியதுமாகும்.

பூவினைக்கொண்டு செய்யப்படும் வழிபாடு வேறுவகையானது. அது சிறந்ததொரு அடிப்படையில் எழுந்த வழிபாட்டு முறையாகும். இப்பேரண்டம் முழுவதும் ஒரு தெய்வீக ஆற்றல் நிறைந்திருப்பதை உணர்ந்து, அம்மாபெரும் தெய்வீக ஆற்றலோடு மனிதன், தான் ஒன்றுபடவும், கலந்து இன்புறவும் விரும்பும் நோக்கத்தோடு செய்யப்படும் வழிபாடே 'பூசையாகும்'. இறைவன் இருப்பில் சிறிதும் ஐயுறாத மக்கள், எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைத் தத்தம் வழிபடு தெய்வ உருவங்களாக அமைத்து, அவற்றைத்தொழுது மலர் தூவித் துதித்து வழிபடுகின்றனர். எனவே, பூஜை என்ற வடசொல், 'பூசெய்' எனும் தமிழ்ச் சொல்லின் திரிபாக வடமொழியில் இடம்பெற்றது என்பர்.[33]

பூசெய் வழிபாடு, ஆகமநெறியில் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்நெறியில் தியானமும், உருவவழிபாடும் சிறப்பிடம் பெற்றுள்ளன. உருவ வழிபாடு என்பது வேதகால சமயத்தில் இடம்பெறவில்லை. பிற்காலத்தில் ஆரியரல்லாத மக்களுடைய செல்வாக்கின் காரணமாகவே, அது பிராமண சமயத்தில் இடம் பெற்றதாகத் தெரிகிறது.[34]

ஆகமங்களில் சொல்லப்படும் பாடவல்லார் நெறி (சரியை), ஆடவல்லார் நெறி, (கிரியை) நாடவல்லார் நெறி (யோகம்),

---

33. S. K. Chatterji, The Vedic Age, P. 160.
''பூப்பலி செய்மின்'' சிலப் குன்றக்குரவை.
''பூமாலை புனைந்து ஏத்தி'? —திருநா. தேவா. 245-2
''தொழுது மலர்தூவி துதித்து'' — ... 135-'38.
''புண்ணியம் செய்து நல்ல புனலோடு மலர்கள் தூவி
எண்ணுமின் எந்தை நாமம். —திருவாய்மொழி 4-6.

34. A. B. Keith. The Religion and Philosophy of the Vedas and Upanishads, Vol I. P. 31.

தேடவல்லார் நெறி (ஞானம்) என்ற நான்கு நெறிகளுள் முதலிரண்டும் தொண்டு நெறி (கருமமார்க்கம்) நிறைந்தும், மற்றிரண்டும் அறிவுநெறி (ஞானமார்க்கம்) நிறைந்தும் உள்ளனவாகும். இறைவனை அகத்தே நாடுதலும், தேடுதலுமாகிய அறிவுநெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவது மக்கள் பலருக்கும் அரியசெயலாகும். பாடலும் ஆடலுமாகிய ஒழுக்கமும் நோன்புமாகிய தொண்டுநெறி யாவரும் எளிதில் கடைபிடித்து ஒழுகுதற்குரிய பக்திநெறியாகும்.35

தமிழகத்தில் தோன்றிய ஆழ்வார்களும், நாயன்மார்களும் பக்திநெறியைப்போற்றி வளர்த்த சான்றோர்களாவர். 'வேதம் ஓதுவதனால் பயனில்லை; சாத்திரங்களின் உட்பொருளைப் பிறரிடம் கேட்டறிவதனால் உண்டாகும் பயன் ஒன்றும் இல்லை. பல அரிய அறநூல்களை நாமும் ஓயாது பயில்வதாலும் பயன் விளையாது. வேதத்தின் ஆறு அங்கங்களைக் கற்று அதன் பொருளினை உணர்வதனால் அடையக்கூடியது ஒன்றுமில்லை ஈசனை உள்ளத்தால் நினைந்து, மனத்தினால் சிந்தித்து, வாயினால், வாழ்த்த வல்லார்க்கே வீடுபேறு கிடைக்கும்' என்று திருநாவுக்கரசர் பக்திநெறியின் அடிப்படைப் பண்பினை எடுத்தியம்பியுள்ளார். இவ்வழிப்பாட்டு நெறி, தமிழர்கள் உலகிற்கு அளித்த சிறந்ததொரு கடவுள் நெறியாகும், 'அன்புள் உருகி, அழுது, அரற்றி என்பும் உருக இராப்பகல் இறைவனைச் சலம் பூலொடு போற்றி' வழிபடுமாறு சொல்லுவதே பக்திநெறி. தமிழகத்தில் கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை பக்திவெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அக்காலத்தில் தோன்றிய அருளாளர்கள் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கி, இறைவனைப் போற்றிப்பாடினர். மனமாசின் கல்லைப் பிசைந்து கனியாக்கும் அவர்களுடைய அருட்பாடல்களே தேவார, திருவாசக, திவ்வியப் பிரபந்தம் எனப்படும் பக்தி இலக்கியங்களாக ஒப்புயர்வற்று விளங்குகின்றது.

தமிழகத்தில் தோன்றிய பக்தி இயக்கம் வடவேங்கடத்தினைக் கடந்து, வட இந்தியாவின் பல்வேறுபகுதிகளில் சென்று பரவியது. இதனை

''பக்திநெறி தமிழகத்தில் தோன்றியது;
மராட்டியத்தில் வளர்ந்தது;
குசராத்தில் மலர்ந்தது;

---

35. P. T. Srinivasa Iyengar., Culture of Indian Philosophy., P. 129-135.

இரசபுதனத்தில் இருளகற்றியது;
வங்காளத்தில் வான்புகழ் பெற்றது''

என்று வடமொழியிலுள்ள பௌசியபுராணம் போற்றியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

எனவே, பிராமண சமயத்தை இந்து சமயமாகமாற்றிய பக்தி நெறி, இந்திய நாகரிகத்தின் மலர்ச்சிக்குத் தென்னிந்தியா அளித்த முதன்மையான பரிசு[36] எனலாம்.

15. மெய்யறிவு:

இந்திய தத்துவ ஞானத்தை வளர்த்த வளம்பெறச் செய்த பெரியார்களுள் தென்னாட்டிலே தோன்றியவர்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளனர். அவர்களுடைய தொண்டு மிகப் பரந்துபட்டதாகவும், அதேசமயத்தில் மிக ஆழமாக வேருன்றிய தாகவும் உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. பிரமசூத்திரத் திற்கு மாபெரும் உரை விளக்கம் எழுதி, 'அத்வைதம்' எனும் வேதாந்தத்தை, சிறப்புமிக்க தத்துவ நெறியாக விளங்குமாறு செய்த சங்கரர் பண்டைத் தமிழகத்தில் சேரநாட்டில் தோன்றியவர் என்பது நாடறிந்த உண்மை, இன்றைக்கு இந்திய சிந்தனையில் வேதாந்தம் அறிவின் ஒளிவிளக்காய் விளங்குவதற்குக் காரணமாக இருப்பவர் சங்கரரேயாவர்.

காஞ்சிக்கு அருகிலுள்ள திரு பெரும்புதூரில் தோன்றிய இராமானுசர், வைணவ சமயத்திற்கு 'விசிட்டாத்துவைதம்' எனும் தத்துவ அடிப்படையை அமைத்துத் தந்தார். தமிழகத்தில் ஆழ்வார்களின் அருள்மொழிகளாகிய திவ்வியப் பிரபந்த பாசுரங் களின் வாயிலாக உருவான, வைணவ சித்தாந்தத்தை முறைப் படுத்திக் கொடுத்ததன் மூலம் இராமானுசர் இந்திய தத்துவ வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டாற்றியுள்ளார்.

தமிழகத்திற்குத் தத்துவ உலகில் பொன்றாப் புகழைத் தேடிக்கொடுத்துள்ள 'சைவசித்தாந்தம்' எனப்படும் தத்துவ நெறியை முதன்முதலாக அறிவியல் முறைப்படி 12 சூத்திரங்களாக வகுத்துக்கொடுத்தவர் மெய்கண்டார்என்ற தமிழ்ச்சான்றோராவர். இவ்வரிய தத்துவம் இந்திய மக்களின் சிந்தனை முறையின், தெளிவிற்கு, ஓர் உரைகல்லாகும். ''சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது மிகவிரிந்ததும், பெரும் செல்வாக் குடையதும், ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே பெரு

36. Dr. S. Krishnaswamy Aiyengar, **Some Contribution of South India to Indian Culture., P. VI.**

மதிப்பிற்குரியதும், இந்தியநாட்டிலுள்ள சமயக் கொள்கைகளுக் கெல்லாம் தலைசிறந்ததுமாகும். தென்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவசித்தாந்தமாகும். இதை உயிர் – மக்கள் தன்மை – உலகியற்கை அறியாமை – துன்பம் – காணப் படாத மறுமை நிலைகள் என்பனவற்றைக் குறித்த சிக்கலான பொருள்களைத் தெரிந்துகொள்ளும் இத்தகைய சிறந்த முயற்சி பற்றி இதுவரை ஆங்கிலத்தில் முற்றிலும் எடுத்து விளக்கப் படவேயில்லை''[37] என்னும் முனைவர் சி. யூ. போப்பின் கருத்து, சைவசித்தாந்தத்தின் அருமைபெருமைகளை அறிவிப்பனவாகும்.

மனித இனத்தின் சிந்தனையிலேயே மிகவும் முழுநிறை வுடையதும், திறமையானதுமாகிய சிந்தனைமுறை சைவ சித்தாந்தம்[38] என்று அறிஞருலகம் வியந்து போற்றுவது இங்குக் கருதத்தக்கது. இவ்வாறு தொன்மைமிக்க இலக்கிய மரபும், மாண்புமிக்க தத்துவமுறையும் இன்றும் இந்தியாவில் உயிர்பெற்று உலவுவதற்குத் தமிழகம் ஆற்றியுள்ள தொண்டு பேரளவின தாகும்.

இத்தமிழகத்தில்தான் மூன்று உலகப் பெரும் சமயங்களாகிய யூத சமயமும், கிறித்துவமும், இசுலாமும் இந்தியாவில் முதன் முதலாக வேரூன்றுவதற்கு ஆதரவான இடத்தைப் பெற்று, இந்தியப்பெருநாட்டில் பரவின.

## 16. வாணிக நிலையங்கள்:

தென்னாட்டு வாணிக அமைப்புகளும் நிலையங்களும் இந்திய நாகரிக வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகள் இங்குக் குறிப்பிடத் தக்கன. வட இந்தியாவின் பொருளாதாரமும் வாணிகமும், உள்நாட்டு வாணிக வழிகளைச் சார்ந்திருந்தன வாணிகச்சாத்துக் கள் உள்நாட்டு வாணிகத்தையே போற்றி வளர்த்தன. ஆனால், தென்னாட்டில் 'வாணிகம்' என்பது பெரும்பாலும் 'திரைகடலோடி திரவியம் தேடும்' கடல்வாணிகமாகவே சிறப்புற்று விளங்கியது. ஆகவே, கடல்வாணிகத்தை நடத்துவதற்கு தென்னாட்டில் பல அமைப்புக்கள் தோன்றின. அவை நாநாதேச திசையாயிரத்தைஞ் ஞாற்றுவர், மணிக்கிராமத்தார், நகரத்தார், வாஞ்சியர், அஞ்சுவண்ணத்தார் எனப்படும் வாணிகக் குழுக்களாகும். அவை

---

37. Dr. G. U. Pope The Thiruvacagam (Eng. Tran) Appendix Note VI. P. LXXIV

38. Dr. Kamil Luslebi. op cit. P. 296.

கடல்கடந்த நாடுகளில் சென்று வாணிகம் செய்வதற்கு இந்திய மக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தன.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் மலேசியாவில் தகோபா என்னும் இடத்தில் மணிக்கிராமம் என்ற தமிழ்நாட்டு வணிகர் சங்கம் ஒன்று இருந்து வந்தமை ஒரு கல்வெட்டால் தெரிகிறது. சீகாழிக்கு அருகில் உள்ள நாங்கூரைச் சேர்ந்த வாணிகன் ஒருவன் அவனி நாரணன் என்ற சிறப்புப் பெயரையுடைய மூன்றாம் நந்திவர்மன் ஆட்சிக் காலத்தில் (கி. பி ஒன்பதாம் நூற்றாண்டில்) மலேயாவில் பெராக்கு மாவட்டத்திலுள்ள இவ்வூரில் குளம் ஒன்றை வெட்டி, அதன் கரையில் கல்வெட்டொன்றைத் தமிழில் பொறித்துள்ளான்.

தென்கிழக்கு ஆகிய நாடுகளில் இந்திய நாகரிகத்தைப் பரப்புவதில் இவ்வாணிக நிலையங்கள் அரும்பெருந் தொண்டாற்றியுள்ளன. இவை தாயகத்தில் தனிச்சலுகைகளையும் உரிமைகளையும் தத்தம் அரசரிடம் பெற்றிருந்தன. கடல் கடந்த நாடுகளில் இவை வாணிகம் செய்துவந்தன. இவ்வகையில் இந்தியப் பொருளாதாரச் செழிப்பிற்கு இவை காரணமாக அமைந்தன. இவ்வெளிநாட்டு வாணிகம் தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் தனிச் சிறப்பு மிக்க ஓர் இயலாக விளங்குகிறது.

## 17. கடற்பேரரசு:

இந்திய வரலாற்றில், வேறெந்தப் பேரரசும் கனவில் கூடக் கருதாத கடல் கடந்த பேரரசினைப் பிற்கால சோழப்பேரரசர்கள் நிறுவினர். இலங்கையும் இலட்சத் தீவுகளும், அந்தமான் நிகோபார் தீவுகளும் தென்கிழக்காசிய நாடுகளுள் பெரும்பகுதியும் சோழப் பேரரசரின் ஆட்சிக்குட்பட்டிருந்தமை இங்குக் குறிப்பிடத் தக்கது. இத்தகைய மிகப்பெரிய கடல் பேரரசை நிறுவுவதற்கு ஏற்ற ஆற்றல் மிக்க கடற்படையைச் சோழப் பேரரசர்கள் பெற்றிருந்ததைப் போன்று வேறெந்த இந்தியப் பேரரசும் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. இந்திய நாகரிகம் கடல் கடந்த நாடுகளில் பரவுவதற்கு இப்பேரரசு பேருதவி புரிந்தது. மேலும், இந்தியாவின் அரசியல் ஆதிக்கத்தை அந்நாடுகளில் நிலைநாட்டவும் வழிகோலியது.

இன்றைய இந்திய நாகரிகத்தின் சிறப்புமிக்க பல்வேறு பண்புகளை உருவாக்கி உதவியதும் தமிழ்ப்பண்பாடு. ஆனால், அதனுடைய அரும்பெரும் தொண்டினை பன்னெடுங்காலமாக அறிஞர்கள் புறக்கணித்தே வந்துள்ளனர். ஓர் அழகிய மாளிகையின் அடிப்படை, வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு எவ்வாறு தோ »

றாதோ, அதைப்போன்றுதான் இந்திய நாகரிகத்தின் அடிப்படையாக அமைந்துள்ள தமிழ்ப்பண்பாடும் வெளிப்படாது மறைந்து கிடக்கிறது. இந்நாட்டில் ஆரியர் ஊடுருவல் முதல் ஆங்கிலேயர் ஆண்டு, அகன்றுபோன இந்நாள்வரை, அந்த அடிப்படையின் மீது எழுப்பப்பட்டுள்ள மேற்கோப்புக் கட்டடங்களின் ஒவ்வொரு பகுதியையும் விடாமல் யாவரும் கண்டு களிப்படைந்து வருகின்றனர். ஆனால் அத்தகைய நாகரிகத்தின் திருக்கோயிலைத் தாங்கி நிற்கும் அடிப்படை யாதென்பதை ஆராய்ந்தறிவார் மிகச் சிலராகவே உள்ளனர். அம்மாபெரும் மாளிகையைத் தாங்கிநிற்கும் தமிழ்ப் பண்பாடெனும் அடிப்படை, காலமெனும் மணலால் மூடப்பட்டு ஆழப்புதைந்து கிடக்கிறது.

---

## உழக்கு எண்ணெய் ஈச்சுரர் கோயில்

மகிடாசுரமர்த்தினி குகைக் கோயிலின் மேலுள்ள பாறையில் ஒரு பல்லவர் கட்டடக் கோயிலைக் காணலாம். இக்கோயிலின் உண்மைப் பெயர் என்னவென்று தெரியவில்லை. ஆனால் இது சென்ற நூற்றாண்டு வரை வழிபாட்டில் இருந்து வந்திருக்கிறது. ஊரிலுள்ள கடைகளில் பணம் வசூலித்து நாள்தோறும் உழக்கெண்ணெய் அழந்து நொந்தா விளக்கெரித்தனர் என்றும், அதனால் இதற்கு உழக்கெண்ணெய் ஈச்சுரர் கோயில் என்று பெயர் வந்தது என்றும், அதுவே மருவி ஒலக்கண்ணேச்வரர் கோயில் என்று வந்ததாகவும் சென்ற நூற்றாண்டில் எழுதப்பட்ட நூலிலிருந்து அறிகிறோம். இக்கோயிலின் கருவறையில் இலிங்கம் ஒன்று இருந்தது. விமானத்தின் மேல் ஒரு பெரும் ஆலமரம் வளர்த்திருந்தது என்றும் அதனால் விமானம் பழுதடைத்தது என்றும் அறிகிறோம். கருவறையில் இப்போது ஏதுமில்லை. சுவரின் புறத்தே வடப்புறம் கைலங்கிரியை எடுத்து ஆட்டமுயன்ற தசமாமுகனைத் தன் கால் விரலால் கடிந்த இராவனானுக்ரஹமூர்த்தியின் சிற்பம் உள்ளது. இதைக் காணும்போது.

கடுகியதேர் செலாது கயிலாயமீது
    கருதேலுன் வீரம் ஒழிநீ
முடுகுவதன்று தன்மென நின்ற பாகன்
    மொழிவானை நன்று முனியா
விடுவிடுவென்று சென்று விரைவுற்றரக்கன்
    வரையுற்றெடுக்க முடிதோள்,
நெடுநெடு இற்று வீழ விரலுற்ற பாதம்
    நினைவுற்ற தென்றன் மனனே.

என்ற அப்பர் பெருமானின் பாடல் நினைவிற்கு வரும்.

இரா. நாகசாமி, மாமல்லை.

# *நாவல் உரைநடைக் காப்பியம் என்பது பொருந்துமா?

வீ. லீமா ரோஸ் மாலா, பி. லிட்., நான்காம் ஆண்டு.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் தமிழில் தோன்றி வளர்ந்த இலக்கிய வடிவம் நாவல். ஒரு புதிய இலக்கிய வகை யான நாவல் உரைநடையாலான காப்பியம் என்று ஒரு கருத்து நிலவுகிறது. இக்கட்டுரையின் நோக்கம், நாவலை உரைநடைக் காப்பியம் என்பது பொருந்தாது என நிறுவுவது ஆகும்.

ஒவ்வொரு வகையான இலக்கியத் தோற்றத்திற்கும் சமுதாய வரலாற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. காப்பியங்கள், வீரப் பாடல்கள், நாவல்கள் ஆகிய ஒவ்வொன்றும் வேறுவேறு கால கட்டத்தில் வேறுவேறு சமுதாய அமைப்பில் தோன்றி யவை என்பது ஒரு பொதுவான கருத்து.

காப்பியமும், நாவலும் தனிவேருன இலக்கிய வகைகள். காப்பியம் நாவலினின்றும் வேறுபடுவது வடிவத்தில் மட்டுமன்று, பொருளடக்கத்தாலுமாகும். பொருள் வேறுபாடே தலையாயது என்று கொள்ளலாம். இப்பொருள் வேறுபாடு மாறுபட்ட சமுதாய அமைப்பின் பிரதிபலிப்பு. காப்பியம் தோன்றும் சமுதாயச் சூழல் வேறு; நாவல் பிறக்கும் சமுதாய அமைப்பு வேறு.

எனினும், நாவலை உரைநடைக் காப்பியமாகக் கொள்ளும் மயக்கம் இன்னும் முழுமையாக நீங்கிவிடவில்லை. உரைநடைக் காப்பியம் (வசன காவியம்)என்பது ஒரு 'முரண்பாடான பிரயோகம்' என்பர் திரு. கைலாசபதி.1

காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலேயே இலக்கியத்தின் உருவமும், பொருளும் அமைகின்றன. வாழ்க்கைக்கு அப்பாற் பட்டதாய், தலைமை மாந்தரின் சிறப்பைக் கூறுவதாய், அறநெறி களைக் கருத்து வடிவில் காட்டுவதாய் செய்யுள் வடிவத்தில்

*22—12—1982 இல் நடைப்பெற்ற கல்லூரிக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரை.

1. தமிழ் நாவல் இலக்கிம், க. கைலாசபதி, பாரி நிலையம், சென்னை, ஜனவரி, 1968 (முநற் பதிப்பு), பக். 11.

அமைந்தது காப்பியம் என்று கருதப்படுகிறது. இதில் கருத்துக் களே சிறப்பிடம் பெறுவன. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, ''காவியமானது செயலை விடுத்துக் கருத்தில் புகுகிறது. பாத்திரங் களின் குணங்கள் செயலால் வெளிப்படுதலைக் காட்டாது, குணங் களை வர்ணிப்பதிலே முயற்சி அடிப்படையாகவுள்ள நோக்கங் களிலும் கருத்துக்களிலும் ஈடுபடுகிறது. ஊனக்கண்ணால் நோக்கக் கூடியவற்றை ஒதுக்கிவிட்டு, மானஸிகக் கண்ணாற் புலப்படக் கூடியவற்றில் ஆழ்ந்து விடுகிறது''[2] என்று காப்பியத்தின் இயல்பைக் கூறுகின்றார்.

மாறாக, மனிதனை, மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றினால் மதிப்பிடாது, அவனது இயக்கம், சூழல், சமுதாய உணர்வுகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே மதிப்பிடும் இலக்கிய நோக்கு நாவலுக்கு உரிய தலையாய பண்பாகும்.

தற்காலச் சமுதாயச் சூழலில் தோன்றும் எழுத்துகளுக்குச் சமுதாயப் பயன்பாடும் தேவையும் உண்டு. இந்தச் சமுதாயத் திற்கு உரியதாகிய நாவல் என்னும் இலக்கிய வகை வாழ்க்கையை அழகியல் நிலைப்பட்ட ஆக்கமாகப் பார்க்காது, அதன் சமூகவியல் தேவைகளை வற்புறுத்துவதாகவே அமைகிறது, புதுநோக்கும் புது நிலையும் பெற்ற மக்களின் இலக்கியக் குரலாகவே தமிழ் இலக்கிய உலகில் நாவல் தொடக்கத்தில் இடம் பெற்றது.

ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்த அனைவரும் படிக்கும்படியாக எழுதப்படுதல் என்பது, நாவலின் நோக்கங்களில் ஒன்றாகும், ''இதன் முக்கியத்துவம் உலக வாழ்வின் தரிசன நோக்கேயாகும். இதன் பின்னணியை உற்று நோக்கினால், இலக்கியம், சமூகவியல், மானுடவியல், வரலாறு (சிறப்பாக, சமூக வாழ்வு), பொதுமக்க ளுடைய தொடர்பியல் ஆகிவற்றின் பிரிக்க முடியாத உறவுகளை வலியுறுத்தலின் நோக்கு இழையோடும்''[3] என்னும் டாக்டர் கா. சிவதம்பியின் கருத்து இங்குக் குறிக்கத்தக்கதாகும்.

தனியொரு மனிதனின் வாழ்க்கைமாற்ற நெறியே நாவலின் அடிப்படைப் பொருளாக அமைகிறது நாவலின் தொடக்கத்தில் குறிப்பிட்ட அந்தத் தனிமனிதன் (முதன்மைப் பாத்திரம்) இருக்கும்

........................

2. காவிய காலம், பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1957, பக். 303.

3. நாவலும் வாழ்க்கையும், டாக்டர் கா. சிவதப்பி, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, பிப்ரவரி, 1978 (முதற் பதிப்பு), பக். 18.

நிலையும், இயங்கும் சூழலும், முறைமைகளும், நாவலின் இறுதி நிலையில் அவன் இருக்கும் நிலையும், இயங்கும் சூழலும், பிறவும் முற்றிலும் மாறுபாடுடையனவாகக் காணப்படும். இம்மாற்றம் வரையறுக்கப்பட்ட, ஒரு கால எல்லைக்குள் நடைபெறுவதற்காகவே அமையும். ''அதாவது, சமூக மாற்றங்கள் தனியொரு மனிதனின் வாழ்க்கைக் காலத்தினுள்ளோ, அன்றேல் ஒரு பரம்பரையின் வாழ்க்கைக் காலத்தினுள்ளோதான் ஏற்படும். காவியத்திற்கும், நாவலுக்குமுள்ள முக்கிய வேறுபாடாக இப்பண்பு கொள்ளப்படல் வேண்டும்''[4] என்பர் டாக்டர் கா. சிவதம்பி.

நாவல் என்ற சொல் இயல்பான உலக அனுபவங்களை ஒட்டிச் செல்லும் இலக்கிய வகை என்பது எட்மன் கொசெ என்பவர் கூற்றாகும்.[5]

''கதையை வாசித்தறிவோர், அது பலதலைப்பட்டு இறுதியத் தியாயத்தில் வந்து முடிபெய்தும் மாட்சியையும் நிகழும் விஷயங்கள் ஒவ்வொன்றும் தமிழக குடும்பங்களில் நிகழத் தக்கவைகளே என்னும் உண்மையினையும், வியவாமற் போகார்'' என்று பேராசிரியர் டி. எஸ். அனவரத விநாயகம்பிள்ளை, திரு. தி. ம. பொன்னுசாமிப்பிள்ளையின் 'கமலாக்ஷி' என்னும் நாவல் வெளி வந்தபோது (1903) நாவலாசிரியருக்கு எழுதிய பாராட்டுக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் செய்தி இங்கு நினைவு கூறத்தக்கது,

அரசியல், அலுவல் தொடர்பானவை, கொடுக்கல், வாங்கல், பணப்பிணக்கு, குடும்பச்சிக்கல் முதலிய மக்கள் வாழ்க்கையோடு நேரே தொடர்புடைய செய்திகளே நாவல்களில் இடம் பெற்றன. காப்பியத்தில் இடம்பெற்ற இயற்கை இறந்த நிகழ்வுகள் பொய் யாப் பழங்கதையாய்ப் போயின.

''இதிகாச, புராண மரபில் வந்த தார்மீகக் கோட்பாடுகளை எந்த அளவிற்கு ஒரு காவியமோ பிரபந்தமோ முறைபிறழாது கூறுகிறதோ, அந்த அளவிற்கு அதன் மதிப்பு உயர்ந்தது. இவ் விலக்கியச் சம்பிரதாய முறையை முதன்முதலாக மறுதலித்தது நாவல்'' என்றும்,

..............................

---

4. நாவலும் வாழ்க்கையும், டாக்டர் கா, சிவதம்பி, தமிழ்ப் புத்தகாலயம். சென்னை, பிப்ரவரி, 1978 (முதற் பதிப்பு), பக். 21.
5. தமிழ் நாவல் இலக்கியம் க. கைலாசபதி, பாரிநிலையம், சென்னை, ஜனவரி, 1968 (முதற்பதிப்பு), பக். 32

"புதுமை எனப் பொருத்தமான பெயர் பூண்ட நவீனமே (Novel) 'புதுமை, புதுமை' என்று உரக்கக் கூவிக்கொண்டு உற்பவித்த 'அசுரப்பிறவி'" என்றும்,

திரு. கைலாசபதி கூறுவது நாவலுக்கும் காப்பியத்தியற்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக-மிகத் தெளிவாக உணர்த்த வல்லது.

புதிய இலக்கிய வகைக்கு மதிப்பும், பெருமையும் அமைய வேண்டும் என்பதற்காகத் தொடக்ககால நாவலாசிரியர்கள் நாவலே உரைநடையாலான காப்பியம் என்று கூறிக்கொண்டனர். ஆனால், நாவல் பல வழிகளிலே காப்பியத்தினுள் கட்டுப்பட்டுக் கிடந்த மொழியையும், அதன் வழியாகப் புலப்படும் உணர்வையும் சுதந்திரப் பிறவிகளாக்கியது என்பதுதான் உண்மை.

இதுகாறும் கண்டவற்றால், உரைநடையினை வடிவமாகக் கொண்டு இயங்கும் நாவல், ஒரு தனிவகையான இலக்கியமே யன்றி, உரைநடைக் காப்பியம் என்று கூறும் கூற்று ஏற்புடைத் தன்று என்பதை உணரலாம்.

---

பயன்படுத்திய நூல்கள்:

(1) தமிழ் நாவல் இலக்கியம், க. கைலாசபதி, பாரிநிலையம், சென்னை, ஜனவரி, 1968 (முதற் பதிப்பு).

(2) நாவலும் வாழ்க்கையும், டாக்டர் கா. சிவதம்பி, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, பிப்ரவரி, 1978 (முதற் பதிப்பு).

(3) காவிய காலம், பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1957.

---

## திருக்குறள்

### —: பொருள் விளக்கம் :—

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

துன்பம் பயக்கும் தீவினைகள் தோன்றா, நல்லின்பம் பயக்கும் நன்னெறி நாயகனின் நன்னெறிப்பட்டு நல்வினைகளை நன்கு அறிந்தாற்றுவாரிடத்து.

—கா. அ.

# பஞ்ச தந்திரக் கதை—ஓர் ஆய்வு

அ. ம. சத்தியமூர்த்தி

## 1. முன்னுரை:

தங்கள் கையில் கிடைத்த சிறந்த நூல்களை எல்லாம் தொகுத்து எழுதி வைத்த பெருமைக்குரியவர்கள் வடமொழியாளர் கள். அவர்கள் மக்களால் பெரிதும் விரும்பப்படும் கதைகளைத் தொகுத்து எழுதி வைக்கவும் செய்தனர். அவ்வகையில் நாடெங் கிலுமிருந்து தொகுத்து எழுதப்பட்டதே பஞ்சதந்திரக் கதையாகும். அக்கதை தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. தமிழில் காணப் படும் பஞ்சதந்திரக் கதையின் அமைப்பு, மூலம், சிறப்பு ஆகியன பற்றி விளக்கி உரைப்பதே இக்கட்டுரையின் குறிக்கோளாகக் கொள்ளப்படுகிறது.

## 2. ஆய்வு வரலாறு:

மிகப் பழங்காலந்தொட்டே பஞ்சதந்திரக் கதை உலகின் பல பகுதிகளிலும் வழங்கி வருகின்ற காரணத்தினால், பலராலும் அது ஆய்வுக்குரிய பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனைப் பற்றி செர்மானிய அறிஞரான எர்டல் (Hertal), அமெரிக்க அறிஞ ரான எட்சர்ட்டன் முதலானோர் விரிவான ஆய்வு செய்துள்ளதாக அறியமுடிகிறது.[1] மேலும் பலர் தொடர்ந்து ஆய்வு செய்தும் வரு கின்றனர்.

தமிழில் காணப்படும் பஞ்ச தந்திரத்தின் பதிப்பு முன்னுரைகளி லிருந்து சில ஆய்வுக் குறிப்புகள் கிடைக்கின்றன. பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை எழுதிய 'பஞ்ச தந்திர மொழி பெயர்ப்பு' எனுங் கட்டுரை, வடமொழிப் பஞ்ச தந்திரத்தின் நேரடித் தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்றின் இன்றியமையாமையை வற்புறுத்துகிறது. இக்குறிப்புகளே அன்றி தமிழில் காணப்படும் பஞ்சதந்திரக்கதை பற் றிய தனித்த ஆய்வுகள் எதுவும் நிகழ்ந்துள்ளதாகத் தெரியவில்லை. எனவே பஞ்சதந்திரக் கதை பற்றிய இவ்வாய்வு இவண் மேற் கொள்ளப்படுகிறது இவ்வாய்விற்குரிய மூல ஆதாரமாக தாண் டவராய முதலியாரின் மகாராட்டிர மொழிபெயர்ப்பாகிய பஞ்ச தந்திர வசனம் எனும் நூல் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## 3. பஞ்ச தந்திரக் கதையின் அமைப்பு:

தமிழில் கிடைக்கும் பஞ்சதந்திரக் கதை நூல்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று வீரமார்த்தாண்ட தேவரின் பஞ்சதந்திர விருத்த

மும், மற்றொன்று தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திர வசனமும் ஆகும். இவ்விரு நூல்களின் அடிப்படையிலேயே பின்னர் வந்த நூல்கள் பலவும் அமைந்துள்ளன.

மூடர்களாய்த் திரிந்த இராச குமாரர்களுக்கு மித்திர பேதம், சுகிர் லாபம், சந்தி விக்ரகம், சப்த ஆனி, அதம்பிரேட்சிய காரித்வம் எனும் ஐந்து கதைகளைக் கூறி அறிவூட்டுவதாக அமைந்த கதைத் தொகுப்பின் பெயரே பஞ்சதந்திரக் கதை என்பதாகும்.

பஞ்சதந்திரக் கதை ஐந்தினையும் சோமசன்மா என்பவர் கூறியபோதும், இதனுள் வரும் கதைகள் பல தலைமைக் கதைப் பாத்திரங்கள் கூறுவனவாக உள்ளன. கதையுள் கதையாக உட்கதைகள் சிலவும் அமைந்துள்ளன.

பஞ்சதந்திரத்தின் முதல் கதையாக அமைவது மித்திர பேதம் அல்லது சிநேகத்தைக் கெடுத்துப் பகையுண்டாக்கல் என்பதாகும்.[2] தனித்தனியே வாழ்ந்து கொண்டிருந்த சிங்கத்திற்கும் எருதிற்கும் இடையே ஒரு நரி நட்பினை ஏற்படுத்தியது. அவற்றின் நட்பு தனக்கு இடையூறாக அமைந்ததை உணர்ந்த அந்நரி, மீண்டும் அவற்றிற்கிடையே பகையையும் ஏற்படுத்தியது. இதுவே மித்திர பேதத்தின் கதையமைப்பாகும்.

மித்திர பேதத்தின் தலைமைக் கதை நீங்கலாக மொத்தம் பதினாறு கதைகள் உள்ளன. அவற்றுள் தலைமைக்கதைப் பாத்திரங்கள் கூறும் கிளைக் கதைகள் பதினொன்றும் கிளைக்கதையின் பாத்திரங்கள் சொல்லும் உட்கதைகள் ஐந்தும் ஆகும்.

இரண்டாவது கதையாக உள்ளது சுகிர்லாபம் அல்லது நட்புப் பேறு எனப்படும். இக்கதையுள் புறா, எலி, காகம், ஆமை, மான் ஆகியன தமக்குள் நட்புகொண்டு ஆபத்துக் காலத்தில் ஒன்றுக் கொன்று உதவிக் கொண்டு வாழ்ந்தமை கூறப்படுகிறது.

சுகிர் லாபத்தில் மொத்தம் மூன்று கதைகள் உள்ளன. அவற்றுள் இரண்டு கதைகள் தலைமைக் கதைப் பாத்திரம் சொல்லும் கிளைக் கதைகளாகவும், ஒரு கதை கிளைக் கதையின் பாத்திரம் சொல்லும் உட்கதையாகவும் அமைந்துள்ளன.

மூன்றாவது கதையாக அமைவது சந்தி விக்கிரகம் அல்லது அடுத்துக் கெடுத்தல் என்பதாகும் இதனுள் பரம வைரியான காகம் கோட்டான்களின் குகையினைக் கொளுத்தி சுகமடைந்த செய்தி கூறப்படுகிறது.

சந்தி விக்கிரகத்துள் மொத்தம் பத்துக் கதைகள் உள்ளன. இவற்றுள் தலைமைக் கதைப்பாத்திரங்கள் சொல்லும் கிளைக்கதைகள் எட்டு ஆகும். மேலும் கிளைக் கதைப் பாத்திரம் சொல்லும் உட்கதை ஒன்றும், உட்கதையுள் உட்கதை என மற்றொன்றுமாக இரண்டு கதைகள் உள்ளன. உட்கதையுள் உட்கதையாக அமைவது முயலும் ஆமையும் சண்டையிட்டுப் பூனையால் உயிர்நீத்த கதை ஆகும்.

நான்காவது கதை சப்தஆனி அல்லது பேரழிவு எனப்படும். குரங்கு முதலையினின்று விடுபட்டமை இதனுள் கூறப்படுகிறது.

சப்தஆனியுள் மொத்தம் பதினொரு கதைகள் உள்ளன. இவற்றுள் தலைமைக் கதைப் பாத்திரங்கள் சொல்லும் கிளைக்கதைகள் பத்து ஆகும். கிளைக் கதையின் பாத்திரம் சொல்லும் உட்கதை ஒன்றும் உள்ளது.

ஐந்தாவது கதை அசம்பிரேட்சிய காரித்வம் அல்லது ஆராயாத செயல் என்பதாகும். வெள்ளறிவன் என்னும் மயிர்வினைஞன் மணிபத்திரன் என்பவனது கருமங் கண்டுழித் தேராமல் இடருற்றமை இதனுள் கூறப்படுகிறது. இக்கதையானது முடிவு பெறாமல் உள்ளது:

அசம்பிரேட்சிய காரித்துவத்துள் மொத்தம் பதினொரு கதைகள் உள்ளன இவற்றுள் தலைமைக் கதைப் பாத்திரம் கூறும் கிளைக் கதை ஒன்றும், கிளைக் கதையின் பாத்திரம் சொல்லும் உட்கதை ஒன்றும் உள்ளன. எஞ்சிய ஒன்பது கதைகளும் உட்கதையின் பாத்திரங்கள் சொல்லும் உட்கதைகளாக அமைந்துள்ளன.

இவ்வகையில் இங்குக் கதை கூறும் உத்தி முறையானது முந்தைய நான்கு கதைகளினின்றும் வேறுபட்டு அமைந்துள்ளது. முதல் நான்கு கதைகளில் கதை கூறுவதில் ஒரு முறையமைப்பு பின்பற்றப் பட்டுள்ளமையைக் காணலாம் இவ்வைந்தாவது கதை முற்றுபெறாமல் உள்ளமையும் கருதத்தக்கது முற்றுபெறாத் தன்மை மூலக்கதை (வடமொழி பஞ்சதந்திரம்) யிலேயே காணப்படும் அமைப்பு என்று ஆய்வாளர்கள் சுட்டுவர். ஐந்தாவது கதையின் மொழிநிலை மற்ற நான்கு கதைகளின் மொழிநிலையிலிருந்து மாறுபட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

4. பஞ்சதந்திரக்கதையின் மூலம்:

பஞ்சதந்திரக்கதை வடமொழி மூலம் உடையது என்பது பலர்

ஒப்பிய முடிபு இக்கதையின் ஆசிரியர் சோமசன்மா அல்லது விஷ்ணுசர்மா என்பவர் ஆவார்.

பஞ்சதந்திரத்தின் காலம் பற்றி கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆயினும் அதன் காலத்தைக் கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு எவரும் கொண்டு சென்றதாகத் தெரியவில்லை.

**பிறமொழிகளில்**
**பஞ்சதந்திரக் கதை:**

பஞ்சதந்திரக்கதை நாடெங்கிலும் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில், அதனை அறிந்த வேற்று மொழியினர், தங்கள் மொழியில் அக்கதையை மொழிபெயர்க்கவும் எண்ணினர் அவ் வகையில் பலமொழிபெயர்ப்புகள் உருவாயின.

பாரசீக அரசன் கொசுரோசு (Chosroex-531-575 A. D) என்பவனால் பஞ்சதந்திரக்கதை பர்சிய மொழியில் முதன்முதலாக மொழிபெயர்க்கப்பட்டது. அதற்கு ‘அகத்திய ஒளிக்கதிர்கள்’ என்பது பெயர். இந்திய அரசன் ஒருவனுக்கு பித்பைத் என்பவனால் இக்கதை சொல்லப்பட்டது என மொழிபெயர்ப்பின் முன்னுரை குறிப்பதனால், அக்கதையைப் ‘பித்பைத் கதைகள்’ என்று பாரசீக மக்கள் குறித்தனர்.[3] பின்னர் அக்கதை அப்துல்லா இபால் மொகப்பா (Abdulla Ibal Mogaffa) என்பவரால் கி. பி. 750-இல், அராபி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.[4] இக் கதை அங்கு ‘கலிலேவா தம்நோ’ எனும் பெயரில் வழங்கப் படுகிறது.

கி. பி. 1080-இல் கிரேக்க மொழியிலும், 1100-இல் ஈப்ரு மொழியிலும், 1270-இல் இலத்தீன் மொழியிலும், 1480-இல் செர்மானிய மொழியிலும், 1582-இல் இத்தாலிய மொழியிலும் 1678-இல் பிரெஞ்சு மொழியிலும் பஞ்சதந்திரக்கதை மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.[5]

தலைசிறந்த மொழியியல் வல்லுநரான எர்டல் என்பவர் ஏறத் தாழ ஐம்பது மொழிகளில் இருநூறுக்கும் மேற்பட்ட மொழி பெயர்ப்புகளைக் கொண்டு பஞ்சதந்திரம் விளங்குகிறது என்று குறிப்பதாகவும் அறிகிறோம்.[6] இவ்வாறு உலகநாடுகள் பலவற் றிலும் பரவிய பஞ்சசந்திரக்கதை பைபில், பில்கிரிம்சு பிராக்ரசு (Pilgrims Progress) ஆகிய இரு நூல்களையும் அடுத்து மிக அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதாகக் காரட் (Garret) எனும் அறிஞர் குறிப்பிடுவதாகவும் அறியலாம்.[7]

### பஞ்சதந்திரத்தின் வழிநூல்கள்:

வடமொழியில் கால ஒட்டத்திற்கு ஏற்ப பஞ்சதந்திரத்தைத் தழுவி வழிநூல்கள் (Recension) பலவும் எழுந்தன. அவ்வகையில் கி. பி. 1199-இல் பூர்ணபத்திரர் எழுதிய பஞ்சாக்கியானம் எனும் நூல் குறிப்பிடத்தக்கது. அடுத்து நாராயணன் என்பவர் எழுதிய இதோபதேசத்தில் நான்கு கதைகளே உள்ளன. இதன் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டுக்கு இடைப் பட்ட பகுதிகளில் குறிப்பிடப்படுகிறது.

வடமொழியில் காணப்படும் தந்திராக்கியாயிகா என்பது தொல்காப்பிய உரையில் பேராசிரியர் குறிக்கும் தந்திர வாக்கிய மாக இருக்கலாம் என்று அறிஞர் ச. பாவானந்தம் பிள்ளை குறிப் பிடுவார்.[8] தந்த்ரோபாக்கியானா என்பது கி. பி. பதினோராம் நூற்றாண்டில் வசுபாகன் எழுதியதாகும்.

### தமிழில் பஞ்சதந்திரக்கதை:

தமிழில் வசன நடையில் ஒன்றும், செய்யுள் நடையில் ஒன்று மாக இரண்டு பஞ்சதந்திரக் கதைநூல்கள் உள்ளன. செய்யுள் நடையில் அமைந்த பஞ்சதந்திரம் வசனநடை நூலுக்கு முந்தை யதாகக் கருதப்படுகிறது.[9] தாண்டவராய முதலியாரின் பஞ்ச தந்திர வசனத்திற்கு முன்பாக, பிழையுடன் கூடிய ஒரு பஞ்சதந்திர நூல் தமிழில் வழங்கி வந்ததாகவும் அறிய முடிகிறது.

தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திர வசனத்தின் முதற் பதிப்பு கி.பி. 1826-இல் வெளிவந்தது. இதனை அவரது 'முதற் பதிப்புப் பாயிரம்' எனும் பகுதியால் அறியலாம். ஆயினும் கி. பி. 1824-ல் பஞ்சதந்திரம் தாண்டவராய முதலியாரால் மொழி பெயர்க்கப்பட்டது என்று திரு. தி. சு பாலசுப்பிரமணியன் குறிப் பிடுவது[10] பொருத்தமற்றதாக அமைகிறது.

தொடர்ந்து பஞ்சதந்திர விருத்தம், வசனம் ஆகிய இரு நூல் களும் பலராலும் பதிப்பிக்கப்பட்டன. அவற்றின் அடிப்படையில் பள்ளிச் சிறுவர்களுக்கென்று பஞ்சதந்திரத்தின் கதை நூல்கள் பல வெளிவந்து கொண்டும் இருந்தன.

தமிழில் காணப்படுகின்ற இரு பஞ்சதந்திர நூல்களும் வட மொழி பஞ்சதந்திரத்தின் நேரடி மொழிபெயர்ப்பு அல்ல. வட மொழி மூலத்தில் சுலோகம், உரை என்ற அமைப்பு இருக்க. தமிழ் மொழிபெயர்ப்புகளில் அவ்வமைப்பு முறையைக்காண இயல வில்லை. மேலும் தமிழில் காணப்படும் இரு நூல்களுக்குமிடையே

யுங்கூட கதை அமைப்பிலும் எண்ணிக்கையிலும் வேறுபாடுகள் உண்டு.[11]

எனவே. வடமொழிப் பஞ்சதந்திரத்திற்கு முழுமையான ஒரு தமிழ் மொழி பெயர்ப்பை உருவாக்க வேண்டும் என்ற பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் கருத்து[12] இவண் நினைவு கூரத்தக்கது.

மூலம் பற்றிய ஆய்வு:

பஞ்சதந்திரக்கதை வடமொழிக்குரியது என்ற கருத்து பலரது மத்தியில் நிலவி வருகிறது. இக்கருத்தின் வன்மை மென்மைகளை இவண் நாம் எண்ணிப் பார்க்கலாம்.

பஞ்சதந்திரக்கதையை முழுமையாக நோக்குமிடத்து, அது நாட்டின் பல பகுதிகளில் வழங்கிய கதைகளைத் தொகுத்து எழுதப் பட்ட ஒரு நூல் என்பது விளங்கும். பஞ்சதந்திரக்கதை நாட்டின் பல பகுதிகளுக்குரியவை என்பதனைக் கதைநிகழிடம் பற்றிய செய்திகளால் நாம் உணரலாம்.

பஞ்சதந்திரத்தின் முதலாவது கதை யமுனை ஆற்றங்கரைப் பகுதியிலும், இரண்டாவது கதை கோதாவரிக் கரையிலும், மூன்ருவது கதை தென்தேசத்திலுள்ள மயிலை நகரின் சமீபத்திலும், நான்காவது கதை கங்கைக் கரையிலும், ஐந்தாவது கதை பைடண புரியிலும் நிகழ்ந்ததாகச் சுட்டப்படுகிறது. இதனைப் போன்றே கிளைக்கதைகள், உட்கதைகள் ஆகிய பலவும் நாட்டின் பல பகுதி களில் நிகழ்ந்ததாகச் சுட்டப்படுவதனையும் காணலாம். எனவே, நாட்டின் பல பகுதிகளில் வழங்கிய கதைகளைத் தொகுத்து பஞ்சதந்திரக் கதை எழுதப்பட்டது என்ற உண்மை விளங்குகிறது.

பார்ப்பனி கீரியைக் கொன்ற கதை பஞ்சதந்திரத்தில் வருகிறது இக்கதை சிலப்பதிகாரத்திலும் காணப்படுகிறது. இவ்வொற்று மையும் பஞ்சதந்திரக்கதை நாட்டு மக்களுக்குரியது என்பதற்கு ஒரு சான்றாக அமையக் காணலாம். இக்கதை பற்றிப் பின்னர் நோக்குவோம்.

மிகப் பழங்காலத்தில் பஞ்சதந்திரக் கதைகளுள் பல தமிழ் நாட்டில் பெருவழக்கில் இருந்தமைக்கு மேலும் பல சான்றுகள் உண்டு. பஞ்சதந்திரத்தில் வரும் கங்கைக்கரையில் பூனை தவம் செய்த நிகழ்ச்சி சிறுபஞ்சமூலத்தில் வருவதனைப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை எடுத்துக்காட்டுகிருர்.[13]

. ... ... ... ... ... ... ... ... ... ... ...

உரைப்பூசல் போற்றல் உறுதவமேல் கங்கைக்

கரைப் பூசை போறல் கடை'
(சிறுபஞ்சமூலம் 100: 3–4)
என்பது பாடல் வரி.

மகாபலிபுரத்தில் காணப்படும் பல்லவர்காலச் சிற்பங்களுள் பஞ்சதந்திரத்தில் வரும் பூனையின் தவமும் ஒன்றாக அமைந்துள்ளது. பஞ்சதந்திரத்தில் வரும் பறவைகள் ஆமையைக் கழியில் சுமந்து சென்ற கதை நிகழ்ச்சி, தஞ்சைமாவட்டம் கண்டியூரில் உள்ள கோயில் ஒன்றில் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவார் ஏ. எசு. பி. ஐயர்.[14]

இதுபோன்ற காரணங்கள் பலவற்றால், பஞ்சதந்திரக்கதை நாட்டு மக்களுக்குரியது என்றும், அதற்கு வடிவங் கொடுத்தமை வடமொழியாளர்க்குரியது என்றும் நாம் தெளியலாம்.

## 5. சிலம்பில் பஞ்சதந்திரக்கதை:

பார்ப்பனி கீரியைக் கொன்ற கதை பஞ்சதந்திரத்தில் ஐந்தாவது தந்திரத்துள் ஒன்றாக வருகிறது. இக்கதை உச்சயினிபுரத்தில் நிகழ்ந்ததாகச் சுட்டப்படுகிறது. இக்கதையே சிலப்பதிகாரத்திலும் வருகிறது.

அடைக்கலக் காதையில் மாடல மறையோன் கோவலனைச் சந்திக்கிறான். அம்மறையோன் கோவலனின் சிறப்புகளை உடல், பொருள், ஆவி என வரிசைப்படுத்திக் கூறுகிறான். கோவலனின் பொருட்கொடையினைப் பற்றிக் கூறும்போது, பார்ப்பனி கீரியைக் கொன்ற கதை அவனோடு தொடர்புபடுத்தப்படுகிறது. அதாவது 'கீரியைக் கொன்ற பார்ப்பனியின் பாவத்தைத் தீர்க்கும் பொருட்டு, பொருட்கொடை செய்து, அவனது கணவனையும் மீட்டுத்தந்த செல்வனே!' என மாடல மறையோன் கோவலனை விளிக்கிறான்.[15]

பார்ப்பனி கீரியைக் கொன்ற கதை கோவலனோடு நேரடித் தொடர்புபடுத்தப்படுவதால் இக்கதையைத் தென்னகத்தவர் அறிந்திருந்தமை தெளிவு. எனவே பஞ்சதந்திரக்கதை நாட்டு மக்களுக்குரியது என்ற கருத்து மேலும் வலுவடைகிறது, மற்றும் சிலப்பதிகாரத்தின் காலத்தை நாம் உறுதி செய்யவும் இதுபோன்ற சில ஒற்றுமைக் கூறுகள் நமக்குத் துணை நிற்கின்றன.

## 6. முடிவுரை:

இதுகாறும் கண்டவற்றால், பஞ்சதந்திரத்தின் முதல் நான்கு கதைகளில் கதைகூறும் உத்திமுறை சிறப்பாகப் பின்பற்றப் பட்டுள்ளமையை உணரலாம். ஆயினும் ஐந்தாவது கதையில்

சற்று நெகிழ்ச்சி காணப்படுவதும் கண்கூடு. மேலும் பஞ்ச தந்திரக்கதை நாட்டுமக்களுக்கு உரியது என்றும், அதற்கு வடிவங் கொடுத்தமை வடமொழியாளர்க்குரியது என்றும், தெளிந்தோம். பஞ்சதந்திரத்தின் நேரடித் தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்றின் தேவை யையும் நாம் உணரமுடிகிறது.

—:( நிறைவு ):—

[குறிப்பு: கட்டுரையாக்கத்தின்போது கருத்துப் பரிமாற்றங்கள் சிலவற்றிற்கு உதவிய முனைவர் சி. எசு. சுந்தரம் (துணைப் பேராசிரியர், வடமொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்) அவர்களுக்கு நன்றி.]

குறிப்புகள்:

1) காண்க: தி. சு. பாலசுப்பிரமணியனின் 'பஞ்ச தந்திரம்' (நூல்: கலைக்களஞ்சியம்-6) எனும் கட்டுரை, பக். 643.

2) கட்டுரையின் பலவிடங்களில் பஞ்சதந்திரக் கதையில், உள்ளவாறே வடமொழி சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

3) காண்க: எசு. வையாபுரிப்பிள்ளையின் 'பஞ்சதந்திர மொழி பெயர்ப்பு' (நூல்: இலக்கிய விளக்கம்) எனும் கட்டுரை, பக். 107.

4) See Vettam Manis Puranic Encyclopedia, P. 554.

5) Ibid. P. 554.

6) Ibid. P. 554.

7) காண்க: ச. பவானந்தம் பிள்ளையின் பஞ்ச தந்திரப் பதிப்பு பக். i-ii.

8) ஷை நூல், பக். ii.

9) காண்க: வீரமார்த்தாண்ட தேவரின் பஞ்சதந்திரம் செய்யுள், பக். 2.

10) காண்க: தி. சு. பாலசுப்பிரமணியனின் 'பஞ்ச தந்திரப்' எனும் கட்டுரை, பக். 643.

11) காண்க: ச. பவானந்தம் பிள்ளையின் 'பஞ்சதந்திரப்' பதிப்பு, பக். vii

12) காண்க: எசு. வையாபுரிப் பிள்ளையின் 'பஞ்சதந்திர மொழி பெயர்ப்பு' எனும் கட்டுரை, பக். 108.

13) ஷை நூல் பக். 108.
14) See: A. S. P. Ayyar's Panchatantra and Hitopadesa Stories, P. 5.
15) காண்க: சிலப்பதிகாரம் அடைக்கலக் காதை, வரி. 54-75.

கருவிப் பட்டியல்:

தமிழ் நூல்கள்:

இளங்கோவடிகள், சிலப்பதிகாரம்: மதுரைக் காண்டம், (பொ. வே. சோமசுந்தரனார் விளக்கவுரை), கழகம், சென்னை-1. இ ப. 1972

பவானந்தம் பிள்ளை ச., (பதி.), பஞ்சதந்திரம் (வசனமும் பாடற் றிரட்டும்), சென்னை. 1914.

வீரமார்த்தாண்ட தேவர், பஞ்சதந்திரம் செய்யுள். மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை, 1924.

ஆங்கில நூல்கள்:

Ayyar A. S. P., Panchatantra and Hitopadesa Stories, V Ramaswamy Sastrulu & Sons Madras-1, IInd edition, 1960.

Vettam Mani, Puranic Encyclopedia, Motilal Banarsidass, Delhi-7, 1975.

கட்டுரைகள்:

பாலசுப்பிரமணியன், தி. சு., 'பஞ்சதந்திரம்' கலைக்களஞ்சியம்-6, தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை, 1959.

வையாபுரிப்பிள்ளை, எசு., 'பஞ்சதந்திர மொழிபெயர்ப்பு', இலக்கிய விளக்கம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5, இ. ப 1965.

---

## கண்ணகி

அருள்நெறிப்பட்ட இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரத்தின் தலைமகள் பெயர் கண்ணகி என்பது அனைவரும் அறிந்திருப் பினும் கண்ணகி எனும் பெயரின் பொருள் பற்றி அறிஞர் பெரு மக்களால் தெளிவான விளக்கம் பிறந்தபாடில்லை. கண்ணன் எனும் ஆண்பால் பெயர் அறிவுடையவன் என்னும் பொருளைத் தருவதுபோல் கண்ணகி எனும் பெண்பால் பெயரும் அறிவுடையவள் என்னும் பொருளையே நல்கும். எனவே, அறிவுடையவள் என்னும் பொருளிலேயே கண்ணகியின் பெற்றோர் கண்ணகிக்கு கண்ணகி என பெயர் வைத்திருக்க வேண்டும்.

—கா. அரசன்.

# புரட்சிக் கவிஞரின் இருண்ட வீடு

இராம. சுப்பிரமணியன்,

எம். ஏ., எம். லிப். எஃசி., பி. எல்., டி. எச். இடி.,

கல்வி என்பது ஒரு தனி மனிதனுக்கு மட்டும் பொருந்துவ தில்லை; குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் அது மிக இன்றியமை யாதது. இல்லத் தலைவன் கல்வி அறிவு பெற்றவனாக விளங்க வேண்டும்; இல்லத்தரசியும் போதிய கல்வி அறிவிடையவளாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்களின் குழந்தைகள் சிறந்த ஒழுக்கத்துடன் கல்வி அறிவுடன் நாட்டின் சிறந்த குடி மகனாக வாழ முடியும். ஆகவே கல்வி அனைவருக்கும் பொது வானது ஆகும். கல்வி அறிவில்லாத குடும்பம் இருண்ட வீடு எனப்பட்டது.

முகத்தில் உள்ள இரண்டு கண்களும் இப்போது நிகழ்கின்ற வைகளையும் இங்கே உள்ளவைகளையும் மட்டும் காண முடியும் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் காண இந்தக் கண்கள் பயன்படா. இந்த இடம் தவிர, மற்ற நாடுகளை இங்கிருந்தே காண்பதற்கும் இந்தக் கண்கள் பயன்படா. எல்லாக் காலங்களை யும் எல்லா நாடுகளையும் ஆராய்ந்து காண்பதற்குப் பயன்படும் கண் கல்விக் கண்ணே. ஆகையால் கற்றோரே கண்ணுடையவர்கள் என்று சொல்ல வேண்டும். கல்வி கற்க உதவாதபோது, முகத்தில் உள்ள கண்கள் புண்களைப்போல் துன்பம் தருவதற்கு உள்ளனவே அல்லாமல் அவற்றால், வேறு பயன் இல்லை.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு — (குறள். 362)

கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர். —(குறள்: 393)

இருண்ட வீடு கவிஞரின் அங்கதக் கதைப் பாடல்களில் ஒன்றாகும். கல்வியறிவு இல்லாத குடும்பத்தில் அறியாமை எவ் வாறு கோலோட்சுகிறது என்பதை மிக அங்கதச் சுவையுடன் சுட்டிக்காட்டுகிறார்.

குடும்ப விளக்கினைக் கண்ட புரட்சிக் கவிஞர் இருண்ட வீட் டினையும் வழங்கியுள்ளார். இனியவை நாற்பது, இன்னா நாற்பது என்ற இரண்டு மாறுபட்ட தமிழ் இலக்கியம் போல் இரண்டு நேர் எதிர்மறையான நூல்களையும் வழங்கியுள்ளார். சமுதாயத்தில் உள்ள குறையினைப் போக்க ஒரு மாற்று இலக்கியமாக—மருந்திலக் கியாமக இருண்டவீட்டை கவிஞர் அமைத்துள்ளார்.

**கதைச் சுருக்கம்:**

ஆதவன் ஒளி வீடுகிறான். காலையில் முதலில் எழவேண்டிய தலைவி கட்டிலில் உறங்குகின்றாள். ஆதவன் வரவினை உணர்ந்தும் அவள் எழவில்லை; தலைவி உறங்குகிறாள்.

எண்ணற்ற பணியாட்கள் அவர்தம் பணியினைச் செய்கின்றார்கள். பால்காரன் கறந்த பாலை இடமாறி வைத்துச் செல்லுகின்றான். விழித்தெழுந்த பெரிய பையன் பாலைத் தண்ணீரென எண்ணிப் பயன்படுத்த, மிகுதிப் பாலில் தலைவி சாணியைக் கரைத்துத் தெளித்துவிடுகிறாள். ஒரே குழப்பத்தில் தொடங்குகின்றது குடும்பம்.

பெரிய பையன் பல்துலக்கிப் பிட்டைத்தின்று வயிறு வலிக்க ஓடி மாட்டின் மீது விழுந்து இரண்டு பல்லையும் இழக்கின்றான். பல் விழுந்ததற்குச் சாண ஒத்தடம் கொடுக்கப்படுகிறது.

இளைய பிள்ளையின் நோய்க்கு 'இருளன்' புகுந்த காரணம் என்று கருதித் தலைவி மந்திரக்காரனை இப்போதழைக்கின்றாள். கணவனுக்கு உணவு இடவில்லை; வேலைக்காரி அப்பணியினைச் செய்கிறாள். தலைவி இயங்கி செயல்பட வேண்டிய அனைத்தும் வேலைக்காரர்களின் விருப்பம்போல நடைபெறுகிறது. கணக்குப் பிள்ளை தூங்குகின்றான்; வேலைக்காரி வேண்டிய அளவு பால் குடிக்கின்றாள்; கேட்க யாரும் இல்லை.

தலைவியின் அண்ணன் விருந்தாக வருகிறான். அவமரியாதையும் பசியும் அடைகிறான்; அவர் கடையில் உண்டு வருகிறார். கணவனுக்கும் மனைவிக்கும் வீண் சண்டை மூள்கிறது. இரவில் வீட்டில் திருட்டு நடக்கிறது பையனுடைய விளையாட்டுத் துப்பாக்கியால் தலைவன் திருடனைப் பயமுறுத்துகின்றான். அப்போது விழித்த பையன் அது பொய்த் துப்பாக்கி எனக் கூறிவிடுகின்றான், திருடன் பணத்தோடும் தப்பிவிடுகிறான். சினத்தால் தலைவன் சந்தனக் கல்லையும், முக்காலியையும் வீச மனைவி மக்கள் இறக்கின்றனர். எரிந்த விளக்குப் அணைகிறது; வீடு இருண்ட வீடாகிறது.

கல்வியில்லையேல் அறிவில்லை; ஒழுக்கமில்லை; எதுவுமில்லை. அக்குடும்பத்தினர் அடையத்தக்கது இன்னது என்பதை இந்நூல் விளக்குகின்றது.

"ஆடவர் பெண்டிர் அனைவரும் கல்வியின் இன்றியமையாமையை உணர்வதுதான் இதை ஊன்றிப் படிப்பதால் ஏற்படும் பயனாகும்" என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

'இருண்ட வீடு' முழுக்க முழுக்க நகைச்சுவைப் பேழையாக உள்ளது. காலையில் பால்கறந்து வைத்துச் சென்ற பின்னர் மூத்த பையன் கையால் பல்லையும் தொட்டுப்பின் செம்பில் உள்ள பாலைக் கொண்டு முகம் கழுவினன் என்றால் இதனைப்போல் நகைப்புக்கிடமான செயல் வேறு வேண்டுமா? இருண்டவீட்டில் நகைப்பிற்குரிய சூழல் ஏற்படக் காரணம் கல்வி இன்மையே ஆகும்.

பெயரமைப்பு:

எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்ட வீடெனக

என்று கூறுகின்றார் கவிஞர். மேலும்

அறிவெனும் வெளிச்சம் அங்கே இல்லை
மடமை மட்டும் மகிழ்ந்து கிடந்து

என்பதாலும் கல்வியின்மையும் அறியாமை இருளும் இணைந்து மலிந்து கிடந்த கீழ் மக்கள் வாழும் இல்லத்தை 'இருண்டவீடு' என்று கூறி, அதனையே இந்நூலுக்குத் தலைப்பாகவும் பெயரிட்டுள்ளார் பாரதிதாசன்.

உவமை நாம்:

இந்நூல் 33 பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது; ஒவ்வொரு பிரிவும் தனித்தனித் தலைப்புக்களைப் பெற்று விளகுகிறது.

குழந்தைகளுக்குச் செம்மையான பழக்க வழக்கங்களை இளம் வயதிலேலே கற்றுக்கொடுப்பது தாய் தந்தையர் கடமையாகும். எதையும் முறையாக செயல்பட இளமையின் பயிற்சி மிகவும் இன்றியமையாதது ஆகும். 'இருண்ட வீடு' பையனின் செயல்களை இடித்துக் காட்டுவதுபோல் பெரியவர்களுக்கு அறிவுரை கூறுகின்றார் கவிஞர்.

அவன் கொல்லையினை நோக்கிச் செல்வதனை,
வில்லம்பு போல மிக விரைவாக

என்ற உவமையால் குறிப்பிடுகின்றார்.

கண்டதை உண்ட பிள்ளையின் வயிறு
கவலை மாட்டின் கழுத்துப் போல
வீங்கி இருந்ததால் வெடுக்கென வலித்தது!

என்று கவலை மாட்டின் கழுத்துக்கு வீங்கிய வயிற்றை உவமையாக்கிக் கூறுவது நகைப்பிற்குரியது ஆகும்.

உறைவிடம் மிகச் சுத்தமாக இருப்பது இல்வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். வீடு ஒட்டடை அடிக்கப்பெற்று குப்பைகள் சுத்தம் செய்யப்பெற்று இருக்கவேண்டும் ஆனல் இருக்கவேண்டும். ஆனல் இருண்ட வீட்டில் ஒரு மாற்றக் காட்சியினைக் காட்டுகின்றார் கவிஞர் :

வீட்டினுள் காற்று வீசுந் தோறும்
மோட்டு வளையில் மொய்த்த ஒட்டடை
பூமழை யாகப் பொழியும் தரையில்
ஊமைக் குப்பைகள் உம்மென்று மேலெழும்!

அறியாமை நிரம்பிய இல்லத் தலைவியின் மனம் இருளில் மூழ்கிக் கிடப்பதுபோல் அவளது வீடும் இருண்டு காட்சி கொடுக் கிறது. அறிவு ஒளியற்ற இருண்ட வீட்டில், நவாப்புக் குதிரை நாடும் முழுவதும் சவாரி வந்து தரையில் புரள்வதுபோல வீட்டுத் தலைவி புரண்டு படுத்துத் தூங்குகின்ருள் என்பதைக் கவிஞர்,

நவாப்புக் குதிரை நாடு முழுதும்
சவாரிவந்து தரையில் புரளல் போல்
படுத்துப் புரண்டு பிடித்தாள் தூக்கம்

என்று காட்டுகிருர். நவாப்புக் குதிரை உவமையும், தூக்கத்தைப் பிடித்துக் கொண்டாள் என்பதும் நகைச்சுவை மிகுந்த பகுதியாக அமைந்துள்ளது.

பெண்களின் பெருமையும் சிறப்பையும் பேசும் பாரதிதாசன் இருண்ட வீட்டின் தலைவியை அறியாமை, மூடப்பழக்கவழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள் முதலியவற்றின் மொத்த உருவமாகப் படைத்துக் காட்டுகின்ருர் கவிஞர். —★—

தமிழ் இலக்கியப் பாதுகாவலர்

## வ. சுப்பையா பிள்ளை மறைவு இரங்கல்

தமிழ் இலக்கியப் பாதுகாவலரும் – புதையுண்டு சிதைந்துபோக விருந்த எண்ணற்ற நூல்களுக்கு உயிர்கொடுத்து அவற்றை மக்கள் மத்தியில் உலவ விட்டவரும் — இந்தி எதிர்ப்பிற்குத் தமிழக அறி ஞர்களை யெல்லாம் திரட்டிய ஆற்றலாளரும்— மறைமலை யடிகள் பெயர் நிலைபெற அவர் பெயரில் நூல் நிலையம், கலைமன்றம், இன்னபிற கண்டவரும் - தமிழ் வளர்ச்சிக்காக 'செந்தமிழ்ச் செல்வி' எனும் ஏட்டை ஐம்பது ஆண்டுக்கு மேலாக நடத்தி வந்தவருமான திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகச் செயல் இயக்குநர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் 24–1—1983 அன்று சென்னையில் தமது 84-ஆம் அகவையில் இயற்கை எய்தி னார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இலக்கிய இலக்கணம் மட்டுமன்றி பல்துறை நூல்களையும் தமிழில் வெளியிட்ட இவர், தாம் வெளியிடும் நூல் எதுவாயினும் அது மக்கள் விரும்பிப் படிக்கத்தக்க அளவுக்கு அழகியதாய் அமைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டவர் ஆவார். இது வரை இவரது உழைப்பால் 1750 நூல்கள் கழகத்தின் மூலம் வெளி யாகியுள்ளன. —பதிப்பாசிரியர் குழு.

பெரிய குளத்துக் கல்வெட்டில்

# மேல் நெடுங்கள நாடு ........ நெடுங்குள நாடு

புலவர் து. இராசகோபால்

முன்னுரை: பாண்டியப் பேரரசு சங்ககால மரபுக்கு ஏற்பப் பல்வேறு உள்நாடுகளைத் தன்னுள் தக்கவைத்து விளங்கியது அவைகளைப்பற்றி வரலாற்று ஏடுகள் பெருமைபடப் பேசுகின்றன.

அவற்றுள் இக்கட்டுரை அணிசெய்வது நெடுங்களநாடு—'நெடுங்குளநாடு' என்னும் நாட்டமைப்பின் பெயர்பற்றி. அஃது இன்றுள்ள பெரியகுளம்[1] என வழங்கும் ஊர்ப்பெயராய்வுக்கு அடிவேராக அமைந்திருப்பது குறித்து எடுத்துரைக்கப்படுவது.

இனி நெடுங்களநாடு-நாட்டுப்பிரிவினுள் முன்னது 'மேல்' அடைமொழியை ஏற்று, மேல் நெடுங்களநாடாக அரசோச்சுவது. பின்னது இழந்து 'நெடுங்குளநாடாக' நிற்பது.

## மேல் நெடுங்களநாடு எங்கே இடம் பெற்றுள்ளது ?

| கல்வெட்டு உள்ள இடம் | மன்னன் | ஆட்சி யாண்டு | நாடு |
|---|---|---|---|
| 1) ஆற்றுத்துறைக்கு இறங்கிச் செல்லும் படிக்கட்டு | முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் | 15, | மேல் நெடுங்களநாடு |
| 2) முருகன் கோயில் கருவறை மேற்குச் சுவர் | ,, ,, | 17 | |
| 3) இராசேந்திர சோழீச்சுர முடைய நாயனார் கோயில் மேற்கு அடிச் சுற்று[2] | எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகரதேவர் | 26 | |
| 4) கயிலாசநாதர் கரடு உய்யவந்த ஈச்சுர முடைய நாயனார் கோயில்[3] | முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் | 19 | |

1) கி. பி. 1216 + 15 = 1231, 2) 1216 + 17 = 1233,
3) ,, 1268 + 26 = 1294, 4) 1216 + 19 = 1235.

நெடுங்களம்: பெரியகுளத்தின் ஒரு பகுதியாக அமைந்து, சுவடற்றுப்போன ஊர். அது தனியூர் வரிசையில் நின்றது என்ற தகுதியால் நனிபுகழ் நட்டது.

நெடுங்களம் — நெடுமை + களம் — ஆதியில் பரந்த சமவெளியைக் குறித்தது.

நெடுங்களநாடு — நெடுமை + களம் + நாடு
ஈறுபோதல் — நெடு + களம் + நாடு
இனம் மிகல்— நெடு + ங் + களம் + நாடு. மவ்வீறு ஒற்றழிந்து உரியீறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரியும் உளவே. களம் + மகர ஒற்று அழிந்தது கள + நாடு நெடுங்களநாடு. கீழ்—கிழக்கு, மேல் — மேற்கு — மேடு. இச்சொல் வழக்குக்கொண்டு நெடுங் களத்தின் பிறப்பை நோக்கினால் இவ்வூர் கிழக்குப் பகுதியிலுள்ள பள்ளத்தில் இருந்தது என்பதும், அவற்றினின்றும் பிரிந்து மேட்டுப் பகுதியிலும் — மேற்குத்திக்கிலும் இருந்து, மேல் நெடுங்கள நாடா யிற்று என்பதும் துணியப்படும்.[4]

நெடுங்குளநாடு: கி. பி. 12ஆம் நூற்றாண்டிற்கு முன்ன ரும் – அதற்குப் பின்னரும் வழக்கில் பயின்றுவந்த மேல்நெடுங்கள நாடு என்ற நாட்டுப்பெயரில் முதலில் மேல் – அகன்று – நெடுங் கள நாடு – நெடுங்குளநாடாக மருவியது ஏன் ?

கல்வெட்டு அடிகள்: ''விரோதிகிருது வருஷம் தை மாசம் பத்து 'நெடுங்குளநாட்டு' பெரிகுளத்து நாயினார் இராசேந்திர சோழீச்சுரமுடைய நாயனார், ஆறுமுகப்பெருமாள் தேவர் செண் பகத்தேவர் சிறை நடை கொடை ராயர், மறை புக்கார் காவலன் இம்மடி......வயிறு நாயக்கர்''...... என்பன, இராசேந்திர சோழீச் சுரமுடைய நாயனார் கோயில் மேற்கு அடிச்சுற்றில் காணப்படும் 'நெடுங்குளநாடு' என்னும் பெயர்த்தொடர் அடிகள் ஆகும்.[5]

மாற்றத்திற்கான காரணம்: இக்கல்வெட்டு அடிகள் நாயக்கர் காலத்தைச் சார்ந்தது என்பது உறுதி. இவண் இடம் பெறும் வயிறு நாயக்கர்–திருமலை மன்னனின் 'தொந்திவடுகன்' என்ற சிறப்புப் பெயருக்கு ஆதரவு காட்டுவதாகக் கருதலாம்.

மற்றும் ஓர் உண்மையும் கண்டறிப்படுகிறது. பெரியகுளம்-ஊர்ப்பெயர் இங்கே அரசோச்சுகிறது. நாயக்கமன்னர்கள் ஆண்ட நாளில் கிராமங்களுக்குச் சமுத்திரம், குடி, புரம், குளம் முதலிய பெயர்மாற்றங்கள் விளைந்ததாக ஒரு வரலாற்றுநூல் கூறுகிறது.[6]

திருப்புகழ்கண்ட அருணகிரியார் இங்குவந்து செவ்வேளின் சிந்தனையில் ஒன்றானபோது ''குளந்தைமாநகர் தளியுறை பெருமாளே'' என விளித்து இறைவனின் அருளை வேண்டு கிறார்.

பெரியகுளம் – பெரியதோர் நீர்நிலை அருகே எழுந்தவூர். குளத்தையுடைய ஊர் குளந்தை எனத் திரிந்தது.

**நாயக்க மரபினர் அரசாட்சியில்:**

நாயக்கர்கள் அரசாண்ட பொழுதில் பெரியகுளம் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கின்றன என்பது ஸ்ரீ பங்காரு

திருமலை நாயக்கர் தானம் செய்துகொடுத்த, "உத்தமம் சூழ்ந்த கெங்கய நாயக்கர் பாளையத்துச் செப்பேட்டில் [உத்தமபாளையம்"] "கிசட்டிண சொக்கனாத னாயக்கய்யனவர்கள் ஸ்ரீ பங்காருத் திருமலைனாயக்க னய்ய னவர்களுக்கு அமாமாகாணமான தென் மண்டலம் பெரியகுளம் மாகாணத்தில் தென்கரையான அழநாடு பசுமலை"[7] ... ... என்று செப்பேட்டுச் சாசனம் மூலம் தெரிய வருகிறது.

இதனால் பெரியகுளம் – ஒருகாலத்தில் நாடாகப்பூத்து, மாகாணமாக மலர்ந்திருக்கிறது. மேலும் தென்கரைப்பகுதி மட்டும் அழநாட்டிற்கு [அளநாடு] உள்ளடங்கியிருந்தது என்பதுவும் நமக்குச் சரித்திரம் காட்டும் சான்றுகளாம்.

## நெடுங்களம் நெடுங்குளம் பெருங்குளம் பெரியகுளம்:

இங்கே ஈற்றில் நிற்கும் களம் என்பது, குளம் எனத்திரிந்தது. சுவடிகளில் உள்ளககரம் எடுத்தெழுதுவோரால் குகரமாக மாறியெழுத வாய்ப்புண்டு. அல்லது களம் என்பது நாளடைவில் குளம் எனத்திரிந்தோ மருவியோ வந்திருக்கலாம். அதனடிப்படையில் சுவரில் பொறிக்கும்போது தவறு ஏற்பட்டிருக்கலாம். இதுவே நியாயமான அடிப்படையாகும்.

நெடுமை — பெருமை, நெடுப்பாறை—நெடுங்கயிறு—நெடும் பயணம் } பெருமை சுட்டியவை.

நெடுமை—பெருமை; குளம் — [நீர்நிலை] குளம்;
பெருமை + குளம் = பெருங்குளம்; பெரு(மை) — ஈறுபோதல்
குளம் — இனம்மிகல்; பெரு + ங் + குளம் = பெருங்குளம்; பெருங்குதிரை–பெரியகுதிரை; பெரும்பொருள் – பெரியமரம், பெரியவீடு எனல்போல, பெரியதோர் நீர் நிலையருகே எழுந்த ஊராதலின் பெரியகுளமாயிற்று என்பது தெளிவு.

திருநாவுக்கரசரின் திருவாக்குக் கண்ட நெடுங்களம் இப்பொழுது திருநெடுங்குளமாக[8] மாறி வழங்குவதை எண்ணுக.

முடிவுரை: அந்நாளில் பெரியகுளம்–நாட்டமைப்பில் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டிருந்தாலும் அவற்றின் சிறப்பினை மேலும் சீர்தூக்கி ஆராய்ந்து செப்பமுறச் செய்வது வரலாற்றறிஞர்களின் கடமை. அதுவே பாரதியின் "சரித்திரம் தேர்ச்சிகொள்" என்னும் புதிய ஆத்திசூடிக்குப் பெருமை சேர்ப்பதாகும். O●O

---

அடிக்குறிப்பு: 1) பெரியகுளம்—மதுரை மாவட்டம்,
2, 3, 5) A. R E. 409, 416, 410/1907, 4) மேல்நெடுங்களநாடு விரிவினை த. பொழில் துணர் 56, மலர் 5, [து. இராசகோபால்]
6 அ. கி. பரந்தாமனார்-திருமலைநாயக்கர்வரலாறு பக் 173/174
7) தி. பொ. நாராயணசாமி பாரதி, செ. செல்வி, சிலம்பு 28, பரல் 5; 8) ரா. பி. சேதுப்பிள்ளை, - ஊரும் பேரும் — பக் 70. ✕

**பதிப்பாசிரியர் குழு:**

1. திரு. **எஸ். நடராசன்,** எம். எல். ஏ.,
   தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்,**
   பேரா. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.
   முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்,**
   367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்,**
   கரந்தை, தஞ்சாவூர்-2.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்,** எம். ஏ.,
   முதனிலைத் தமிழாசிரியர், உ. மே. பள்ளி,
   கரந்தை, தஞ்சாவூர்-2.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்** பி. ஏ.,
   அமைச்சர், க. த. சங்கம், பொழிற்றொண்டர்.

---

தமிழ்த்தாய் வாழ்க

**கரந்தைத் தமிழ்ச சங்கம்**

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

| | | உள் நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| 1. | ஆண்டு வரி | ... 20—00 | ... 030—00 |
| 2. | தனி இதழ் | ... 02—00 | |
| 3. | ஆயுள் வரி | ... 250—00 | ... 250—00 |

—: **சங்க உறுப்பினர்கள்** :—

| | |
|---|---|
| திங்கள் வரி | ... 000—25 |
| ஆண்டு வரி | ... 003—00 |
| ஆயுள் வரி | ... 100—00 |

Regd No. TN/TJ/17.

உ

தமிழ் வாழ்க!

# தமிழ்ப் பொழில்

## கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண்:

திரு. 42. திரு. பா. இறையரசன், க.மு.,
'அன்னை இல்லம்'
'அஞ்சற்றுறை இல்லம்'
அஞ்சற்றுறைக் குடியிருப்பு,
தஞ்சாவூர்-6. - 613 006. களுக்கு

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

## விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

| | |
|---|---|
| நெல்லை வருக்கைக் கோவை | 0—12 |
| சித்தரந்தாதி | 0—12 |
| சுருதி வீணை | 0—25 |
| கவியரசு நினைவுமலர் | 1—00 |
| சிவமும் செந்தமிழும் | 0—25 |
| Garland of Tamil Poetry | 2—00 |
| கச்சிக் கலம்பகம் —(பூண்டி அரங்கநாத முதலியார்) | 6—50 |
| தமிழரசி குறவஞ்சி | 0—62 |
| யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர் | 50—00 |
| கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்) | 30—00 |
| மெய்ஞ்ஞானத்தின் — கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு) | 2—00 |
| நக்கீரர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு) | 3—00 |
| கபிலர் ,, ,, | 4—00 |
| பிற வெளியீடுகள்: | |
| கலைக்கூத்தன் கவிதைகள் | 6—00 |

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,
அன்னை அச்சகம், 1734, காந்தி சாலை, தஞ்சாவூர்-613 002.